விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 18 சனிக்கிழமை (03.11.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 320

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

# இலங்கையில் நீதித்துறை தாக்கப்படுகிறது!

## சர்வதேச மன்னிப்புச்சபை குற்றச்சாட்டு

(லண்டன்)

இலங்கை அரசாங்கம் நீதித்துறை மீது ஒழுங்கீனமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மனித உரிமை பாதுகாப்பு நிறுவனமான சர்வதேச மன்னிப்புச்சபை குற்றம் சாட்டியுள்ளது.

இது குறித்து அவ்வமைப்பு நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் அரசியலமைப்பை மீறியதாக பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீது குற்றம் சாட்டியுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் அவரை பதவியிலிருந்து அகற்ற முயல்கிறது.

அங்கு மாற்றுக் கருத்துக்களைக் கொண்டோரைத் தாக்கும் சம்பவங்கள் இப்போது சட்டவரைஞர்கள், நீதித்துறை உறுப்பினர்களை தாக்கும் அளவுக்கு பூதாகரமாக வளர்ந்து விட்டது.

மேலும் நீதித்துறையின் சுதந்திரத்தில் தலையிடும் முயற்சிகள் பற்றி முறைப்பாடு செய்த மேல் நீதிமன்ற நீதிபதி தாக்கப்பட்டமையை சர்வதேச மன்னிப்புச்சபை விசேடமாக சுட்டிக்காட்டியுள்ளது.

நீதிபதிகள் மீதான இவ்வாறான அழுத்தங்களையிட்டு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப்பேரவையினால் இலங்கையின் மனித உரிமைசாதனைகள்மதிக்கப்பட்டபோது அமெரிக்காவும் ஜேர்மனியும் விசனம் தெரிவித்தன என்றும் அந்தச்சபை சுட்டிக்காட்டியுள்ளது. (ந-11)

## தற்கொலை அங்கிகள் ஆறு மீட்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்கொலை படையணியின் 6 தற்கொலை அங்கிகள் இறுதிக்கட்ட போர் நடைபெற்ற இடமான வெள்ள முள்ளிவாய்க்காலில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

இவ்மீட்பு நடவடிக்கையினை விசேட புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டதாக யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

இவ் மீட்பு நடவடிக்கையின் போது ஒரு கிலோகிராம் (19ஆம் பக்கம் பார்க்க)

## மீள்குடியேற்ற அமைச்சர் முல்லைக்கு நேற்று விஜயம்

(முல்லைத்தீவு)

மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரக்கோன் நேற்று முல்லைத்தீவுக்கு விஜயம் செய்துள்ளார்.

நேற்று நண்பகல் ஒரு மணியளவில் முல்லைத்தீவு கேப்பாபிலவு மக்களை சந்தித்த அமைச்சர் அம்மக்களுக்கான நிரந்தர வீட்டுத்திட்டத்திற்கான மாதிரி கிராம பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து வைத்தார்.

பின்னர் முதல் 50 வீடுகளுக்குரிய கட்டிட பணியை (19ஆம் பக்கம் பார்க்க)

## குற்றப் பிரேரணை குறித்து அமெரிக்கா கவனம்

(ஜெனிவா)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை குற்றப்பிரேரணை மூலம் பதவியிலிருந்து நீக்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை தொடர்பில் அமெரிக்கா கவனம் செலுத்தியுள்ளது.

நீதித்துறையின் செயன்முறையில் அரச தலையீட்டை நிறுத்துவதன் மூலம் நீதித்துறையின் சுயாதீனத்தை உறுதி செய்ய வேண்டியதன் அவசியத்தை அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

ஜெனிவாவில் அனைத்துலக ஆவர்த்தன பரீசிலனையின்போது உரையாற்றிய அமெரிக்கத் தூதுவர் எய்லின் சம்பர்லைன் டொனஹோ இதனை வலியுறுத்தியுள்ளார்.

இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்துதல், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல், உட்கட்டமைப்புக்களை மேம்படுத்தல், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் (20ஆம் பக்கம் பார்க்க)

## டெசோ தீர்மானங்களை ஐ.நா.கவனத்தில் எடுக்கும்

### மு.க.ஸ்ராலினிடம் ஐ.நா.துணைச் செயலர் உறுதியளிப்பு

(நியூயோர்க்)

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக திமுக பொருளாளர் ஸ்ராலின் மற்றும் டி.ஆர்.பாலு ஆகியோர் ஐ.நா.துணைப் பொதுச் செயலாளர் யான் லியாசனைச் சந்தித்து டெசோ மாநாட்டுத் தீர்மானங்களை கையளித்துள்ளனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த யான் லியாசன் இத்தீர்மானங்கள் குறித்து ஐ.நா. நிச்சயம் கவனம் செலுத்தும் என அவர்களிடம் உறுதியளித்துள்ளார்.

இச்சந்திப்புக் குறித்து திமுக தலைமைக் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது,

அமெரிக்காவின் நியூயோர்க்கில் உள்ள ஐ.நா.மன்றத்தில் ஈழத்தமிழர் பிரச்சினை குறித்த திமுக தலைவர் கருணாநிதியின் கோரிக்கை (20ஆம் பக்கம் பார்க்க)

## தொற்றுநோய் பரவும் அபாயம்

(கொழும்பு)

நாட்டில் நிலவும் காலநிலை சீர்கேட்டினால் தொற்றுநோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

குறிப்பாக வெள்ள அனர்த்தத்திற்கு உள்ளான மக்களுக்கு நீரினால் காவப்படும் தொற்றுக்கள் ஏற்படும் சாத்தியங்கள் இருப்பதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பிரிவுப் பணிப்பாளர் பபா பலிகவதன தெரிவித்துள்ளார்.

எனவே பொதுமக்கள் தொற்றுநோய் தொடர்பில் எச்சரிக்கையாக இருக்குமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ந-11)

## இலங்கையின் வாக்குறுதிகளை நம்ப முடியாது - மன்னிப்புசபை விசனம்

(லண்டன்)

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கையின் வாக்குறுதிகளை நம்ப முடியாது என சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

மனித உரிமை நிலைமைகள் குறித்து இலங்கை அரசாங்கம் வழங்கும் வாக்குறுதிகளை சர்வதேச சமூகம் தொடர்ந்தும் ஏற்றுக் கொள்ளக் கூடாது.

நாட்டில் இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அரசாங்கம் தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளது.

மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றச்செயல்கள் தொடர்பில் புதிதாக விசாரணை நடத்தப்பட வேண்டும்.

2008-ம் ஆண்டு கால மீளாய்வு அமர்வுகளின் போது இலங்கை அரசாங்கம் சர்வதேசத்திற்கு வழங்கிய வாக்குறுதிகளில் பல இன்னமும் நிறைவேற்றப்படவில்லை.

இவ்வாறான ஓர் சூழ்நிலையில் அரசாங்கத்தின் (19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை-இந்திய அமைச்சர்கள் சந்திப்பு

(புதுடில்லி)

இலங்கை இந்திய வெளிவிவகார அமைச்சர்களுக்கு இடையில் புதுடில்லியில் நேற்று பேச்சு வார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸும் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷீடும் இருதரப்பு உறவுகள் குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

வர்த்தக மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளை மேம்படுத்துவது குறித்தும் இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கை (19ஆம் பக்கம் பார்க்க)

## 13ஆம் திருத்தத்தை நீக்கினால் அரசியலிலிருந்து விலகுவேன்



### பிரபா எம்.பி. அதிரடி

(கொழும்பு)

13-வது திருத்தச்சட்டத்தை அரசாங்கம அகற்ற முற்பட்டால் அரசாங்கத்திற்கான ஆதரவை வாபஸ் பெறுவேன் என அவர்களுக்கு சொல்லிவைக்க விரும்புகின்றேன் என ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் ஊடகங்களுக்குத் தெரிவித்தார். (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும்

### மல்வத்த மஹாநாயக்க தேரர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை மாற்றியமைக்க வேண்டும். அதேபோல் தமிழர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என கண்டி மல்வத்தை பீடத்தின் மஹ்றாநாயக்க திப்பட்டுவாவே ஸ்ரீசுமங்கள தேரர் நேற்றுத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட புதிய உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முறைமை பற்றி அமைச்சர் தினேஸ் குணவர்த்தன மஹாநாயக்க தேரரை நேற்று வெள்ளிக்கிழமை காலை சந்தித்து தெளிவுபடுத்தினார். இதனையடுத்து மஹாநாயக்க தேரர் மேற் (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை - மானிப்பாய்.
# 2013 ம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக்கடைகள், கோழிஇறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் என்பவற்றை 2013.01.01 தொடக்கம் 2013.12.31 ம் திகதிவரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித்திகதி :- 15.11.2012 - பி.ப 01.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 16.11.2012 - பி.ப 12.00மணிவரை
கேள்வி திறக்கும் திகதி :- 16.12.2012 - பி.ப02.00 மணிக்கு

1. கேள்விப்பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி உட்பட இருபிரதிகளை தவிசாளர் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அதற்கென தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும்.மூன்றாவது பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம். என்னும் முகவரியிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.
2. கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையையும் அதன் நிழற்பட பிரதியையும் கொண்டுவருவதுடன் தாம் வதியும் இடத்தின் வதிவிடச்சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. உள்ளூராட்சி மன்றங்களால் தவறுனராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. படிவம் வழங்கப்பட்ட பின் கண்டு பிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
4. கேள்விப் படிவக்கட்டணம், கேள்வித்தொகை, மாத வாடகை என்பவற்றிற்கு 2% தேசத்தை கட்டியெழுப்பும் வரி (NBT) யும் 12 % பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) செலுத்தப்படல் வேண்டும்.
5. கேள்வி நிபந்தனைகள் அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ/நிராகரிக்கவோ தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
6. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர்கள் கேள்வித் தொகையிலும் 1/3 பகுதியை 28.11.2012 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்துகொள்ள வேண்டும்.
7. எமது சபைக்குட்பட்ட மாதகல் காடாப்புலத்தில் பதிதாக புனரமைக்கப்பட்ட கொல்களத்தில் ஆடு, மாடுகள் அறுப்பதற்கு பயன்படுத்தி, அதற்குரிய கொல்கள கட்டணத்தை பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்தில் செலுத்துதல் வேண்டும்.
8. கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்திலும் உப அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

### 2013ம் ஆண்டுக்கான கேள்வி அட்டவணை

| | சந்தைகள் (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்களுடன்), இறைச்சிக் கடைகள், கோழி இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம்N.B.T, Vat தவிர | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை N.B.T, Vat தவிர | மாதாந்த வாடகை N.B.T, Vat தவிர |
|---|---|---|---|---|---|
| **1. மானிப்பாய் பட்டின உப அலுவலகம்** | | | | | |
| 1. | மானிப்பாய் பொதுச்சந்தை | 1000.00 | 15000.00 | 1365100.00 | - |
| 2. | மானிப்பாய் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 432168.00 | 400.00 |
| 3. | மானிப்பாய் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 149710.00 | 300.00 |
| 4. | மானிப்பாய் பொதுச்சந்தை கோழி இறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 786500.00 | 400.00 |
| **2. மானிப்பாய் கிராம உப அலுவலகம்** | | | | | |
| 1. | காக்கைதீவு பொதுச் சந்தை | 1000.00 | 5000.00 | 380955.00 | - |
| 2. | நவாலி பொதுச்சந்தை | 1000.00 | 5000.00 | 199235.00 | - |
| 3. | சாவற்கட்டு சந்தை | 1000.00 | 5000.00 | 190345.00 | - |
| 4. | நவாலி பிரசாத் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 89650.00 | 400.00 |
| 5. | நவாலி பிரசாத் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 30000.00 | 300.00 |
| 6. | நவாலி பிரசாத் சந்தை கோழி இறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 23375.00 | - |
| 7. | ஆனைக்கோட்டை சந்தி மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 250690.00 | - |
| 8. | ஆனைக்கோட்டை சந்தி ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 63580.00 | - |
| **3. பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம்** | | | | | |
| 1. | பண்டத்தரிப்பு பொதுச்சந்தை | 1000.00 | 15000.00 | 1132186.00 | - |
| 2. | பண்டத்தரிப்பு சாந்தை சந்தை | 500.00 | 2000.00 | 78210.00 | - |
| 3. | பண்டத்தரிப்பு சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 165110.00 | 600.00 |
| 4. | பண்டத்தரிப்பு சந்தை கோழி இறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 121000.00 | 600.00 |
| 5. | பண்டத்தரிப்பு சந்தை கருவாட்டுக் கடை இல.1 | 500.00 | 1500.00 | 7500.00 | 600.00 |
| 6. | பண்டத்தரிப்பு சந்தை கருவாட்டுக் கடை இல.2 | 500.00 | 1500.00 | 7500.00 | 600.00 |
| **4. பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்** | | | | | |
| 1. | மாகியப்பிட்டிச் சந்தை | 1000.00 | 5000.00 | 111320.00 | - |
| 2. | இளவாலை பொதுச் சந்தை | 1000.00 | 5000.00 | 264535.00 | - |
| 3. | மாதகல் பொதுச் சந்தை | 1000.00 | 5000.00 | 109435.00 | - |
| 4. | மாகியப்பிட்டிச் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 1500.00 | 45035.00 | 250.00 |
| 5. | மாகியப்பிட்டிச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 5600.00 | 250.00 |
| 6. | மாதகல் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 1500.00 | 46310.00 | 250.00 |
| 7. | மாதகல் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 5500.00 | 250.00 |
| 8. | இளவாலை சந்தை மாட்டிறைச்சிக் கடை | 1000.00 | 5000.00 | 128335.00 | - |

திரு. அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன்,
தவிசாளர்,
வலிதென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

02.11.2012 (C-1426)


செல்லா சினிமா- யாழ்ப்பாணம்




10.30
2.30
6.30

30.10.2012 முதல் A/C
ஆசிரியர், மாணவர்களுக்கு
விசேட சலுகைக் கட்டணம்
D.T.S


## விமானம் தரையிறக்கம்

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் ஜெட் விமானமொன்றின் இயந்திரம் தீப்பற்றிக் கொண்டதையடுத்து, அவசரமாகத் தரையிறக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த விமானத்தில் உள்ள இரண்டு இயந்திரங்களில்ஒன்றிலிருந்து தீப்பொறி கிளம்பியுள்ளது. இதனையடுத்தே அவ்விமானம் தரையிறக்கப்பட்டதாக விமான நிலைய அதிகாரிகள்தெரிவித்தனர். (ந-11)


## வேலையாள் தேவை

நெல்லியடி பிரதான வீதியில் இயங்கும் பார்மசி ஒன்றுக்கு மாலை 6.30 மணி வரை வேலை செய்யக்கூடிய A/L படித்த பெண்பிள்ளை தேவை. அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:-
0213201751, 0770238140 (875)

## வீடு வாடகைக்கு உண்டு

அரசடி வீதியில் மாடி வீடு வாடகைக்கு
கொடுக்கப்படும். [தனியார் நிறுவனத்திற்கு மட்டும்]
தொடர்பு:- 282, அரசடி வீதி, நல்லூர்.
072 2058854, 072 2928781 (870)

## 7 நாட்களில் வீட்டு, நிறுவன மின் இணைப்பாளராக வேண்டுமா? (Wiring)

- பயிற்சி முடிவில் சுயமாக தொழில் புரிவதற்கான உத்தரவாதத்துடன் நிறுவனங்களில் வேலை புரிவதற்கு சான்றிதழும் வழங்கப்படும்.
- வயதெல்லையின்றி அனைவரும் கலந்து கொள்ளமுடியும்.
- அதி உயர் வருமானம் ஈட்டும் துறையும், தொழில்நுட்ப பாடநெறியுமாகும்.

**IISEEES NALLUR CAMPUS**
762, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
T.P. : 021 222 4728, 0777444225
e mail : Info@iiseees.lk (C-1429)


## யாழ்ப்பாணம் மாநகர சபை
## பொதுசன நூலகம்/சுப்பிரமணியம் பூங்கா
## தனியார் பாதுகாப்புச் சேவைக்கான விண்ணப்பம்

யாழ்.பொதுசன நூலகத்திற்கும், சுப்பிரமணியம் பூங்காவிற்கும் 01.01.2013 தொடக்கம் ஒரு வருட காலத்திற்கு தினமும் 24 மணி நேரம் பாதுகாப்பு சேவை வழங்கக்கூடிய இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தனியார் பாதுகாப்பு சேவை நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மாநகர சபையில் பெறக்கூடிய விண்ணப்பப் படிவத்தில் மட்டுமே விண்ணப்பிக்கலாம். விண்ணப்பப் படிவம் ரூபா 500/= (வற்வரி நீங்கலாக)-ம், மீளளிக்கக் கூடிய வைப்புப்பணம் ரூபா 1000/= ம் செலுத்தி மாநகர சபை அலுவலகத்தில் 15.11.2012 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவம் பெறப்பட்ட பின்னர் விண்ணப்பிக்காவிடின் வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.

விண்ணப்பங்கள் யாவும் 19.11.2012 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் மாநகர ஆணையாளர், மாநகர சபை யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது நேரடியாகக் கையளிக்கப்படல் வேண்டும். கேள்விகள் யாவும் 19.11.2012 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப 2.00 மணிக்கு திறக்கப்படும். விண்ணப்பகாரர் அவர் பிரதிநிதி கேள்வி திறக்கப்படும்போது சமுகமளிக்க முடியும். மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

திருமதி யோ. பற்குணராஜா,
மாநகர முதல்வர்,
யாழ்ப்பாணம்.
02.11.2012 (C-1425)


# Original HERO HONDA Pleasure

HERO HONDA



~~199,900/=~~

தற்போது விலைக்குறைப்பு செய்யப்பட்டுள்ளது

194,900/- மட்டுமே

S.S மோட்டோர்ஸில் மட்டுமே
S.S மோட்டோர்ஸ்
இல. 154, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு - 021 492 3685, 077 5095469 (C-1427)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

# இது என் தொழில்

ஒருநாள் கடவுள் சாவகாசமாக உட்கார்ந்திருந்தார்.

வாயு பகவான் அவர் அருகில் வந்தார். சிறிது நாட்களுக்கு எனக்கு லீவு தேவை– என்று கூறினார்.

"எதற்கு லீவு?" எனக்கேட்டார் கடவுள்.

"பூமிக்குத் தேவையான காற்றை கொடுக்க வேண்டியது என் வேலை– அதற்காகத் தினமும் சங்கை எடுத்து ஊதிக்கொண்டே இருக்கிறேன். அப்படி தொடர்ந்து ஊத வேண்டியிருக்கிறது. அதை ஊதி, ஊதி அலுத்துப்போய் விட்டது. சிறிது நாட்களுக்கு ஓய்வு எடுத்தால் நல்லது என்று தோன்றுகிறது என்று வாயு பகவான் கூறியது.

அதன்பின்னர் பகவான் வந்தார்... "காற்று இல்லாவிட்டால் மழை வராது. அதனாலே நானும் சிறிது காலம் ஓய்வு பெற நினைக்கிறேன்" என்றார்.

கடவுள் பார்த்தார். "கலியுகம் முடிய வேண்டியிருக்கிறது. ஆதலால் உலகத்தை அழிப்பதற்கு இது நல்ல சந்தர்ப்பம்" என்று முடிவு செய்தார்.

"சரி... உங்கள் இருவருக்கும் பத்து வருட லீவு கொடுக்கிறேன். வாயு பகவான் காற்று வீச வேண்டாம்; வருண பகவான் மழை பெய்ய வேண்டாம் என்று கடவுள் கூறினார்.

"சரி" என்று கூறிவிட்டு இருவரும் சென்று விட்டார்கள்.

மழை இல்லையென்றால், பூமியிலே விவசாயம், பயிர், செடி, கொடிகள் எப்படி வளரும். பத்து வருடங்கள் இப்படியே இருந்து விட்டால் பஞ்சம், பசி, பட்டினி என நாட்டில் பிரச்சினை உருவாகி விடும். இதனால் புதிய மக்களை நாட்டில் உருவாக்கலாம் என்று கடவுளுடைய திட்டம்.

வாயு பகவானுக்கும்; வருண பகவானுக்கும் பொழுது போகவில்லை. இருவரும் அமர்ந்திருந்து ஊர்க்கதை பேச ஆரம்பித்து விட்டார்கள்.

நாரதர் இதைப் பார்த்தார். அவருக்கு இது பொறுக்கவில்லை. "இவர்கள் இரண்டு பேரும் எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறார்கள்... நாமெல்லாம் எவ்வளவு அவஸ்தைபட வேண்டியுள்ளது. எவ்வளவு கெட்ட பேர் கேட்கிறோம்" என்று நினைத்தார்.

"இதை சும்மா விடக்கூடாது" என்று முடிவெடுத்தார்.

உடனே புறப்பட்டு பூலோகத்திற்கு வந்து விட்டார். இங்கே வந்தவர் அமைதியாக இருக்கவில்லை. பெரிய பூகம்பத்தை உண்டாக்கினார்.

இங்குள்ள மக்களுக்கு உண்மை நிலவரத்தை சொல்ல ஆரம்பித்தார்.

வாயு பகவானுக்கும் வருண பகவானுக்கும் பத்து வருடங்கள் லீவு கொடுத்து கடவுள் அமைதியாக இருக்கும்படி அனுப்பி வைத்துள்ளார். அதனாலே இன்னும் பத்து வருடங்களுக்கு உங்களுக்கு மழை பெய்யப் போவதில்லை. ஏதோ என்னாலே முடிந்தவற்றை உங்களுக்கு சொல்லியுள்ளேன். அதன்பின் உங்களின் முடிவு– என்று கூறிவிட்டு புறப்பட்டார்.

இதைக்கேட்ட மக்களுக்கு பேர் அதிர்ச்சி ஏற்பட்டது. பத்து வருடங்கள் தண்ணீர் இல்லாமல் எப்படி விவசாயம் செய்வது. அவர்கள் தங்களிடம் இருந்த அனைத்தையும் பத்திரப்படுத்த ஆரம்பித்தார்கள். அடுத்தவர்களுக்கு எதையும் கொடுக்கவில்லை. அனைவரும் சுயநலவாதிகளாக மாறிவிட ஆரம்பித்தார்கள். தனக்கு மிஞ்சித்தான் தான தருமம் என்ற நிலை அங்கு உருவெடுத்து.

ஒரு மனிதன் இன்னொரு மனிதனைக் கண்டால் கதைத்துப் பேசுவது கிடையாது. கதைத்துப் பேசினால் ஏதாவது கேட்டுவிட்டால் என்ன செய்வது?

நாட்கள் சென்றபின் ஒருநாள் கடவுள் உயரத்தில் இருந்து பூமியை எட்டிப்பார்த்தார். இங்கே எந்தத் தொழிலும் நடைபெறவில்லை. அனைத்தும் "கம்" என்ற நிலையில் கிடப்பதை அவதானித்தார். வயல்வெளி எல்லாம் வெறிச் சோடிக் கிடந்தது.

அப்படி இருந்தும் எங்கோ ஒரு மூலையிலே ஒரு ஏழை விவசாயி மட்டும் வயலில் ஏர் உழுது கொண்டிருந்தான்.

இவன் என்ன தண்ணீர் இல்லாமல் நிலத்தை உழுது கொண்டிருக்கிறான். விவசாயம் எப்படி செய்வான். கடவுள் நாரதரை அனுப்பி அவனை விசாரிக்கச் சொன்னார்.

நாரதர் வந்தார். ஏன் இப்படி உழுது கொண்டிருக்கிறாய். விவசாயம் செய்ய முடியாது என்று தெரிந்தும் ஏன் அநாவசியமாக ஏர் உழுது கொண்டிருக்கிறாய் என்றார்.

அதற்கு விவசாயி, "இது என் தொழில்; இதை நான் மறந்து விடக்கூடாது. இல்லையா... இதை நான் மறந்து விட்டேன் என்றால் பத்து வருடங்கள் சென்று மழை பெய்யும் போது நான் என்ன செய்ய முடியும்?" என்று விவசாயி கூறினான். இது கடவுள் காதிலே விழுந்தது.

ஒரு சாதாரண ஏழை விவசாயிக்கு– ஒரு மனிதனுக்கு– இருக்கிற தொழில் பக்தி கூட நமக்கு கிடையாதே என்று நினைத்தார்.

வாயு பகவானுக்கும் வருண பகவானுக்கும் வழங்கிய லீவினை இடை நிறுத்தினார்.

அவர்களும் வழக்கம்போல தொழில் செய்ய ஆரம்பித்தார்கள். அனைத்தும் சந்தோசமாக நடந்தது. எல்லோரும் ஒற்றுமையாக இருந்தனர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ராஜீவ்காந்தி கொலை தொடர்பில் வைகோ விசாரிக்கப்படவில்லை

## விசாரணை அதிகாரி கே.ரகோத்தமன் குற்றச்சாட்டு

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கு தொடர்பாக சிறப்புப் புலனாய்வுக் குழுவின் தலைவர் கார்த்திகேயன் கட்டளைப்படி வைகோவிடம் முறையாக விசாரணை நடத்தவில்லை என இந்த வழக்கின் முதன்மை விசாரணை அதிகாரி கே.ரகோத்தமன் குற்றம் சாட்டியுள்ளார்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கை விசாரித்த முதன்மை விசாரணை அதிகாரி ரகோத்தமன் ராஜீவ்காந்தி கொலைக்கான கூட்டுச் சதி சி.பி.ஐ. கோப்புகளிலிருந்து என்ற பெயரில் ஒரு நூல் எழுதியுள்ளார்.

விசாரணையின் போது விடுதலைப்புலிகள் அமைப்பின் புகலிடமான யாழ்ப்பாணத்திற்கு வைகோ சென்று வந்தது தொடர்பான இன்டைகர் ஸ் கேவ் உள்ளிட்ட 500 இறுவெட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டதாக ரகோத்தமன் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இச்சந்திப்பின்போது பொட்டு அம்மானை பிரபாகரன் அறிமுகப்படுத்தி உள்ளார். இது தொடர்பாக வைகோவிடம் விசாரிக்கப்படவில்லை. இந்தியா– இலங்கை ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்பாக அசோகா ஹோட்டலில் தங்கியிருந்த பிரபாகரனுடன் பேசிய உரையாடல் பற்றி வைகோவிடம் விசாரிக்க வேண்டும் என வலியுறுத்தியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆதாரங்களின்படி அசோகா ஹோட்டலில் தங்கியிருந்த பிரபாகரனுடன் இன்டர் கொமில் வைகோ பேசியுள்ளார். அப்போது ராஜீவ்காந்தி தனது முதுகில் குத்தி விட்டதாகவும் இந்தியா– இலங்கை இடையிலான ஒப்பந்தம் ஈழப்பிரச்சினைக்குத் தீர்வாகாது என்றும் பிரபாகரன் வைகோவிடம் கூறியுள்ளார்.

ஆனால், வழக்கு விசாரணையின்போது வீடியோவிலிருந்த குரல் பதிவு தன்னுடையதுதான் என்பதை ஏற்க வைகோ மறுத்து விட்டார் என ரகோத்தமன் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். (அ–2)

# புலனாய்வு பிரிவினர் தொடர்பில் எமக்கு முறைப்பாடு கிடைக்கவில்லை

## கிடைத்தால் உடன் நடவடிக்கை

யாழில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்த்தேசிய முன்னணிகளினால் நடத்தப்படும் ஆர்ப்பாட்டங்களில் இராணுவ புலனாய்வாளர்கள் தலையிட்டு அச்சுறுத்தல் விளைவித்தனர் எனத் தமக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றால் அது குறித்து தாம் நடவடிக்கை எடுக்க முடியும் என யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக்பெரேரா தெரிவித்தார்.

யாழில் இராணுவத்தினரின் காணி அபகரிப்புகளுக்கு எதிராக இடம்பெறுகின்ற ஆர்ப்பாட்டங்களின் போது இராணுவப் புலனாய்வாளர்கள் ஆர்ப்பாட்டக்காரர்களினை படமெடுப்பதாகவும் அச்சுறுத்தலாகவும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் சார்பில் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இக்குற்றச்சாட்டு தொடர்பில் சட்ட ஒழுங்கினை கடைப்பிடிக்கும் பொலிஸாரால் நடவடிக்கை எடுக்க முடியுமா? என நேற்று அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கேள்வி எழுப்பப்பட்டது. இதன்போது பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேற்படி சம்பவங்கள் தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படாலும் அது தொடர்பில் பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைக்கவில்லை. எனினும் அவ்வாறான அச்சுறுத்தல்கள் தொடர்பில் எமக்கு முறைப்பாடு வழங்கப்பட்டால் நடவடிக்கை எடுக்க முடியும் என்றார் அவர். (அ–4)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 150 | 80 | 90 |
| உருளைக்கிழங்கு | 120 | 120-140 | 110 | 130 |
| பச்சைமிளகாய் | 100 | 60 | 55 | 90 |
| தக்காளி | 100 | 80 | 50 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 30 | 30 | 40 |
| கோவா | 150 | 60 | 60 | 120 |
| கரட் | 120 | 80 | 80 | 200 |
| பூசணி | 80 | 30 | 35 | 50 |
| புடோல் | 100 | 90 | 45 | 80 |
| வாழைக்காய் | 80 | 60 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 60 | 65 | 80 |
| பெரிய வெங்காயம் | 90 | 40 | 80 | 75 |
| பாகற்காய் | 160 | 120 | 110 | 120 |
| வெண்டிக்காய் | 70 | 90 | 40 | 60 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 55 | 80 |
| பயற்றங்காய் | 140 | 120 | 120 | 160 |
| லீக்ஸ் | 150 | 110 | 75 | 120 |
| பீற்றூட் | 80 | 40 | 40 | 60 |
| கறிமிளகாய் | 100 | 90 | 80 | 150 |
| முருங்கைக்காய் | 80 | 120 | 50 | 60 |
| போஞ்சி | 140 | 220 | 80 | 200 |
| கத்தரிதம்புள்ள | 110 | 120 | 75 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 | 25 |
| தேசிக்காய் | 300 | 250 | 240 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 35 | 35-40 |

## இராசி பலன்

03.11.2012
(ஐப்பசி 18, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
சதுர்த்தி முற்பகல் 9.38 மணிவரை
மிருகசீரிடம் பிற்பகல் 4.15 மணிவரை
இராகுகாலம் 9.04-10.34 மணிவரை
சுபநேரம் 3.04-4.34 மணிவரை

**மேடம்** சவால்களைச் சமாளிக்கும் நாள், உடன் பிறப்புக்கள் வழியில் உள்ளம் மகிழும் சம்பவமொன்று நடைபெறலாம், தொழில் முன்னேற்றகரமாக இருக்கும்.

**இடபம்** உறவினர்களின் சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வியாபார விருத்தியுண்டு, தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், வாக்கு மேன்மையுண்டு.

**மிதுனம்** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், உறவினர்களின் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், ஒரு வகையில் செலவுகள் ஏற்படலாம்.

**கடகம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் உருவாகலாம், அலைச்சல்கள் அதிகரிக்கலாம், சயன சுகக்குறைவான நாள்.

**சிங்கம்** வெளிநாட்டுத் தொடர்புகள் அனுகூலம் தரும், தொழில் முன்னேற்றகரமாக அமையும், இனிமையான நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**கன்னி** ஆடம்பரப் பொருட்கள் வாங்குவதில் நாட்டம் காட்டுவீர்கள், புதிய திட்டங்கள் தீட்டி வருமானத்தை அதிகரிக்க நினைப்பீர்கள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்** ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், பயணங்களால் பலனுண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** எடுத்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம், எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கவனமெடுக்க வேண்டிய நாள்.

**தனுசு** பயணங்களால் ஆதாயமுண்டு, பால்ய நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறலாம், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள்.

**மகரம்** கனிவான பேச்சுக்களால் காரியம் சாதிப்பீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், உடல் ஆரோக்கியம் சீராகும்.

**கும்பம்** பூமி சம்பந்தப்பட்ட வகையில் கணிசமான தொகைகள் வந்து சேரலாம், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், நட்பு வட்டம் விரிவடையும் நாள்.

**மீனம்** உறவினர்களின் அன்புத் தொல்லைகளை சந்திக்கலாம், சுப செய்திகள் வந்து சேரும் நாள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வீர்கள்.

வள்ளுவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 ஆயிரத்து 756 பேர் கடும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டனர்

## அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் பெய்த கடும் மழையினால் 4 ஆயிரத்து 756 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ரவி தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தின் விசேட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில நாட்களாக குடாநாட்டில் பெய்த கடும் மழை காரணமாக ஒருவர் உயிரிழந்ததோடு 4 ஆயிரத்து 756 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்றார்.

இதன்போது யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் காலநிலை மாற்றத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்களை இனம் காணப்பதற்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்குவதற்கும் யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலாளர்களும் இரவு, பகலெனப் பாராது அயராது பாடுபட்டனர் எனப் பாராட்டினார். (அ-6)




# மருத்துவத்துறை ஆளணிப்பற்றாக்குறைகளை அறிக்கைமூலம் சமர்ப்பித்தால் நடவடிக்கை

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திற்கு 27 வைத்தியர்கள் தேவை என விண்ணப்பித்திருந்தோம். ஆனால், 17 வைத்தியர்களே வந்தனர். தீவகப் பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளுக்கு பணியாற்ற வைத்தியர்கள் வர மறுக்கின்றனர் என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தின் விசேட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்று முன்தினம் நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது சுகாதாரம் தொடர்பாக ஆராயப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

வைத்தியர்கள் பற்றாக்குறை, தாதியர்கள் பற்றாக்குறை, பொதுச்சுகாதார பரிசோதகர்கள் பற்றாக்குறை, சிற்றூழியர்கள் பற்றாக்குறை யாழ்.மாவட்டத்தில் தொடர்ந்த வண்ணமேயுள்ளது.

தீவகப் பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளில் பணி புரிவதற்கு வருமாறு பலமுறை பத்திரிகைகளில் விளம்பரம் செய்தோம். இருந்தும் பயனெதுவும் இல்லை. அத்தோடு யாழ். மாவட்டத்தில் 27 வைத்தியர்களுக்கு பற்றாக்குறையுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்ட போதும் 17 வைத்தியர்கள் மட்டும்தான் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்குப் பதிலளிக்குமாறு வடமாகாண ஆளுநரினால் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ரவீந்திரனுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது. இதற்கமைய உரையாற்றிய செயலாளர் ரவீந்திரன் வடக்கு மாகாணத்தில் சேவை செய்ய பெரும்பாலான வைத்தியர்கள் பின்னடிக்கின்றனர். கொழும்புக்கு செல்லவே அதிக விருப்பம் தெரிவிக்கின்றனர். அதனால் வைத்தியர்களை நியமிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்றார்.

இதனிடையே குறுக்கிட்ட பருத்தித்துறை பிரதேச சபையின் தவிசாளர் மருதங்கேணி வைத்தியசாலை எப்போது இயங்கும் எனக் கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளித்த யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் இன்னும் இரண்டு வாரத்திற்குள் இயங்கும் என உறுதிபடத் தெரிவித்தார்.

இதனையடுத்து வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் மற்றும் வலி. வடக்கு பிரதேச சபைத் தவிசாளர்கள் ஆகியோர் டெங்குநோய் பரவல் அதிகரித்து வருவதனால் கழிவுகளை அகற்றுவதற்கு ஆளணிப்பற்றாக்குறை பெரும் தடையாகவுள்ளது. இது தொடர்பாக ஆளுநரிடம் எழுத்துமூலம் அறிவித்துள்ளோம் எனவும் தெரிவித்தனர்.

இதன்போது குடாநாட்டில் டெங்கு நோய் பரவல் தொடர்பில் வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் உரையாற்றினார். அவர் தனது உரையில்,

டெங்கு நோயின் தாக்கம் தற்போது அதிகரித்து வருகின்றது. நோயின் பரவலைக் கட்டுப்படுத்த கடந்த மாதம் 8 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரை டெங்கு நோய் கட்டுப்பாட்டு வாரமாக அறிவித்திருந்ததோடு இந்தக் காலப்பகுதியில் சுமார் .60 ஆயிரம் வீடுகள் சோதனைக்குட்படுத்தப்பட்டதோடு புகையூட்டல் நடவடிக்கையிலும் ஈடுபட்டோம் என்றார்.

இதனிடையே கொக்குவில் பகுதியில் புகையூட்டல் நடவடிக்கையில் ஈடுபட்டீர்களா? ஏனெனில் அங்குதான் நாடாளுமன்ற உறுப்பினர் விநாயமூர்த்தி ஐயாவின் வீடு உள்ளது என்றார் அமைச்சர்.

கொக்குவில், திருநெல்வேலி இன்னும் பல இடங்களில் புகையூட்டல் நடவடிக்கையினை மேற்கொண்டதாகவும் பணிப்பாளர் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அத்தோடு யாழ்.மாவட்டத்தில் 70 பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தேவைப்படுமிடத்து வெறும் 55 பேர் தான் உள்ளனர் எனவும் தெரிவித்தார். இதனையடுத்து உரையாற்றிய அமைச்சர், வைத்தியர்களின் தேவை, ஏனைய ஆளணிப்பற்றாக்குறை தொடர்பில் தமது அறிக்கை சமர்ப்பிக்குமாறும் விரைவாக அந்த ஆளணிப்பற்றாக்குறைகள் நீக்கப்படும் எனவும் தெரிவித்தார். (அ-6)

## பரிசளிப்பு விழா

(கரவெட்டி)

வடமராட்சி தேவரையாளி இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அதிபர் மா.நவநீதமணி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் ம.குட்டித்தம்பி கலந்து கொள்ளவுள்ளார். பிரதம விருந்தினரின் பாரியாரும் வடமராட்சி கல்வி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளருமான திருமதி ரஞ்சிதம் குட்டித்தம்பி பரிசில் வழங்கி கௌரவிக்கவுள்ளார். (அ-9-24)




## நாடகமும் அரங்கியலும் இலவச பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தோற்றும் நாடகமும் அரங்கியலும் மாணவர்களுக்கான முன்னோடி செய்முறை பரீட்சை வழிகாட்டல் நிகழ்வு யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை கந்தையா உபாத்தியாயர் மண்டபத்தில் ஆசிரியர் பு.கணேசராஜாவினால் நடத்தப்படவுள்ளது.

பயிற்சிப் பட்டறையில் ஆர்வமுள்ள ஏனைய கல்லூரி மாணவர்கள் பங்குபற்ற முடியுமெனவும் அவ்வாறு கலந்து கொள்வோர் பாடசாலைச் சீருடையுடனும் ஏனைய ஒழுங்குகளுடனும் உரிய நேரத்திற்குச் சமுகமளிக்குமாறு கல்லூரி அதிபர் இ.ஈஸ்வரதாசன் கேட்டுள்ளார். (அ)

# வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

வேலணை, புளியங்கூடல் நாரந்தனைப் பகுதி வர்த்தகர்களுக்கு எதிராக கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்படாமை, அதிக விலைக்கு பொருட்களை விற்றமை தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கினை நேற்று முன்தினம் விசாரித்த ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதவான் எஸ். மகேந்திரராஜா ஒவ்வொரு வர்த்தகர்களுக்கும் தலா இரண்டாயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்தார்.

அத்துடன் இத்தகைய தவறுகளை மீண்டும் செய்யக்கூடாது எனவும் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர் என யாழ்.மாவட்ட பாவனையாளர் அதிகார சபை மாவட்ட அதிகாரி என்.சிவசீலன் தெரிவித்துள்ளார். (எ-6-9)

## தனலக்ஷ்மி பூஜை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீஸ்ரீ அம்மா பகவான் அனுக்கிரக அஷ்டலக்ஷ்மி பூஜை கடந்த செப்டெம்பர் 15 ஆம் திகதி முதல் பிரதி சனிக்கிழமை தோறும் நடைபெற்று வருகின்றது.

இதற்கமைய இப்பூஜையின் நிறைவாக தனலக்ஷ்மி பூஜை இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க பிரார்த்தனை நிலையம், கொக்குவில் சற்சங்க நிலையம், வேதநாயகி இல்லம், இலக்கம் 815 கே.கே.எஸ்.வீதி சிவலிங்கப்புளியடி யாழ்ப்பாண நிலையம், சுன்னாகம் கதிரமலை சிவன் கோவில் மண்டபம் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.

ஐஸ்வர்யத்திற்கான தடைகள் நீங்க, கடன் தீர, தொழில் முன்னேற்றம், சொத்துக்கள், நிலம், வீடு, ஆபரணங்கள், செல்வச் செழிப்பான வாழ்க்கை மலர இப்பூஜையில் கலந்து பயன்பெறுமாறு யாழ்.மாவட்ட சற்சங்க ஒன்றியம் கேட்டுள்ளது. (அ-9)

## இலக்கிய பேரவையின் பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை இலக்கியப் பேரவையின் யாழ்.இலக்கிய வட்டம் நடத்தும் 2010, 2011 ஆம் ஆண்டுகளின் சிறந்த இலக்கிய நூல்களுக்கான பரிசளிப்பும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் ஆஸ்க் மீடியா முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ். எஸ்.குகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்ஒளி அனுசரணையுடன் நடைபெறும் இந்நிகழ்வில் ஆசியுரையினை யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத்தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அருட்சகோதரி ம.சயந்தி ஆகியோர் ஆற்றவுள்ளனர். (அ-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரிய குற்றச் சம்பவங்கள் சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன

## விசாரணைகள் தாமதப்படுவதற்கு இதுவே காரணம்- பிரதிப் பொலிஸ் மா அதிபர்

(யாழ்ப்பாணம்)

சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு காணப்படுகின்ற வேலைப்பளுவின் காரணமாகத் தான் புலிக்கொடி விவகாரம் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்க தாமதமாகின்றதென யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

ஊடகவியலாளர் தாக்கப்பட்டமை புலிக்கொடி விவகாரம் மற்றும் கழிவு ஒயில் வீச்சுக்கள் தொடர்பில் விசாரணைகள் இழத்தடிப்புச் செய்யப்படுவது ஏன் என நேற்று நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கேள்வியெழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், அனைத்து குற்றங்கள் தொடர்பிலும் விசாரணைகள் இடம்பெற்று கொண்டு தான் இருக்கின்றன. சில பெரிய சம்பவங்கள் சட்டமா அதிபரின் ஆலோசனைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளன. சட்டமா அதிபரின் ஆலோசனை கிடைத்த பின்னர் தான் அவை தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியும். இதற்கு ஊடகவியலாளர் தாக்கப்பட்டு நீண்ட காலமாகியும் ஏன் இதுவரை சட்டமா அதிபரிடம் இருந்து பதில் கிடைக்கவில்லை எனக் கேட்டபோது அதற்கு பதிலளித்த யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சாதாரண ஒரு திருட்டுச் சம்பவமே 2 வருடங்களின் பின்னர் தான் பொலிஸாரினால் கண்டு பிடிக்க முடிகின்றது. சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு இலங்கை முழுவதிலும் பாரிய குற்றச் செயல்கள் அனைத்தும் ஆலோசனைக்காக அனுப்பிவைக்கப்படுகின்றன.

அந்த வகையில் அனைத்திற்கும் ஒரேயடியாக தீர்வினை பெற முடியாது படிப்படியாகத்தான் பெறமுடியும் என அவர் தெரிவித்தார். (அ-4)


**Cambridge Management College**

புதிய பிரிவுகள் ஆரம்பம்:-
03.11.2012

யாழில் முதன்முறையாக UK இல் இருந்து வருகை தந்துள்ள ஆங்கிலேயர்களால் ஆங்கிலம் New Method இல் கற்பிக்கப்படுகின்றது.



Mr. Rob Horne M.Phil in English Qualified Cambridge Uni Examiner

Ms. Janette Smith Master of Education (English)

பல்கலைக்கழக அனுமதிக்காக காத்திருக்கும் மாணவர்களுக்கான தனியான பிரிவு ஆரம்பமாகின்றது. உங்கள் பல்கலைக்கழக கல்வியை சிறந்த ஆங்கில அறிவுடன் தொடர வேண்டுமா? உங்கள் பதிவுகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள்.

Cambridge Management College
இல. 23, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம், (கச்சேரி பஸ்நிலையம் அருகில்)
தொ.பேசி : 0777740999, 0212221818
Email-cmcjaffna@gmail.com


## மழை வெள்ளத்தால்

# கிளி, புதுக்குடியிருப்பு பகுதிகளில் 621 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மற்றும் புதுக்குடியிருப்பு பகுதிகளில் மழை வெள்ளத்தினால் 621 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நீல் தழுவத்த தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த இவ் அனைத்துக் குடும்பங்களும் தற்காலிகமாக பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கடந்த பல நாட்களாக தொடர்ச்சியாக பெய்த மழை காரணமாக மீளக்குடியமர்த்தப்பட்ட பிரதேசங்களான இவ்விரு இடங்களிலும் மழை வெள்ளம் தேங்கியதனால் அவர்களது குடிசைகள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதனால் அவர்கள் தொடர்ந்தும் அங்கு தங்கமுடியாத காரணத்தினால் பாடசாலைகளில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதில் புதுக்குடியிருப்பில் பாதிக்கப்பட்ட 221 குடும்பங்களும் இரணைப்பாலை றோமன் கத்தோலிக்க பாடசாலையிலும் மந்துவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையிலும் கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாதிப்படைந்த 400 குடும்பங்களும் சாந்தபுரம் பாடசாலையிலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்றார்.

இவ்வாறு தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டவர்கள் அனைவருக்குமான நிவாரணங்கள் வழங்கப்படுவதாக அரச அதிகாரிகள் தெரிவிக்கின்ற போதிலும் அவ்வுதவிகள் தமக்கு போதாது என பாதிக்கப்பட்ட அம்மக்கள் தெரிவிக்கின்றனர். (அ-4)


## இந்திய திருத்தல யாத்திரை

இந்த யாத்திரைகள் 05.01.2000 ஆண்டு காலமான என் மனைவியின் வேண்டுகோளுக்கிணங்க சேவை நலன் கொண்டு குறைந்த செலவில் நடாத்தப்படுகின்றது.

இது தமிழ்நாடு, ஆந்திரா, பாண்டிச்சேரி, கேரளா ஆகிய மாநிலங்களிலுள்ள பிரசித்தி பெற்ற புண்ணிய வரலாற்று சிறப்புமிக்க குறிப்பாக, மலைக்கோட்டை விநாயகர், பொற்கோவில், திருப்பதி, குருவாயூர், 9 நவக்கிரக ஆலயங்கள் தனித்தனியாக சிதம்பரம் உட்பட பஞ்சபூத திருத்தலங்கள், ஆறுபடை வீடுகள், மேல் மருவத்தூரையும், சுசீந்திரம் ஆஞ்சநேயர், கன்னியாகமரு, முருகன், கபாலீஸ்வரர் சிவன், சுவாமி மலை முருகன், வனத்திருப்பதி,காளகஸ்திரிசிவன், பார்த்தசாரதி விஷ்ணு, ஏகாம்பரேஸ்வரர் சிவன், சௌமியதாமோதரப்பெருமான், தாராசுரம் சிவன், திருவானைக்காவல் சிவன், தனித்தனியாக நவக்கிரகங்கள் 9 கோவில், மெரீனாபீச்,ஸ்ரீதிரிநேத்ரதஜபுஜ வீர ஆஞ்சநேயர், உவரி முருகன், 60 க்கு மேற்பட்ட ஆலயங்களையும் தரிசிக்கலாம். ஆரம்பம்: 16.11.2012, 16.12.2012 , ஆகிய தினங்களில் 18 நாட்கள்- 10பேர்.

தங்களிடம் பெற்றுக்கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை இருவழி விமான ரிக்கெட், கொழும்பிலிருந்து எயார்போட் போகவும் திரும்பிவரவும் வாகனவசதி யாத்திரை தொடங்கி முடியும் வரை 18 நாட்கள் A.C,V.D.O, AUDIO உள்ள சொகுசு வாகன வசதி, காலையும் இரவும் காப்பி, டிபன், மதியம் தரமான சைவ உணவு (சாதம்) ஹோட்டல்களில் ஒரு நாளைக்கு ஒருவருக்கு ஒரு லீற்றர் மினரல் வாட்டர், 2பேருக்கு 2 கட்டில் மெத்தை, குளியல் அறையுடன் கூடிய சுகாதாரமான றூம்கள் எடுத்து தங்க வைக்கப்படுவீர்கள். முக்கியமாக இரவு 10 மணிக்கு மேல் வண்டி ஓட்டப்படமாட்டாது. வயதானவர்களுக்கும், ஆண்கள்,பெண்கள் தோஷ நிவர்த்தி செய்பவர்களுக்கும் முன்னுரிமை உண்டு.

விருப்பமுடையவர்கள் பாஸ்போட் படமுள்ள பக்கம் ஒரு போட்டோ பிரதியும், ஒரு பாஸ்போட் கலர் புகைப்படமும் அனுப்பி பதிவு செய்யவும்.

செல்லுமிடங்களில் குறூப்பாக எடுக்கும் புகைப்படங்கள் 60 படமும், அல்பமும் ஊர்திரும்பும் போது தரப்படும். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களிலிருந்து 6 பேருக்கு மேல் வருபவர்களுக்கு கொழும்பு எயார் போட்டிலிருந்து திரும்பிச்செல்ல எமது செலவில் வாகன வசதி ஏற்பாடு செய்து தரப்படும்.

கட்டண விபரங்கள் உள்ளிட்ட மேலதிக விபரங்களை அறிய தொடர்பு கொள்ளுங்கள்...

**கலாநிதி ஸ்ரீ ரெங்கநாதன்**
No.66/2-3/2, Joseph Dias Lane, Colombo-15
Tel: 0777 680102, 0724-222989, 0777 864061
Web: wwww.sridevipilgrims.com

சென்ற யாத்திரையில் கலந்துகொண்டவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து
P.திலகவதி அம்மா : T.P.021 222 2711
M.T.வாசகர் : T.P: 0772487939
திருகோணமலையில்
திரு.T. சிவபாலன் Tel: 0777 293271
(சி/1425)


## பட்டிமன்றம்

துன்னாலை அல்லை அம்பதி வடிவேலர் மணிமண்டபம் நடத்தும் வாணி விழா நாளை ஞாயிற்றுக்கிழமை வடிவேலர் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மாலை 5 மணியளவில் பண்டிதர் பொன். சுகந்தனின் தலைமையில் யாழ். பட்டிமன்ற குழுவினர் வழங்கும் சிறப்புப் பட்டிமன்றம் இடம்பெறும். (அ)

# யாழில் காசோலை மோசடி அதிகரிப்பு

யாழில் காசோலை மோசடிகள் அதிகரிப்பதாகவும் இம்மோசடிகள் பெரும்பாலும் வியாபார ஸ்தாபனங்களிலேயே இடம்பெறுவதாகவும் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். கடந்த வாரத்தில் மட்டும் 11 இலட்சம் ரூபாய் பெறுமதியான 6 காசோலை மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இவற்றுக்கு வியாபார ஸ்தாபனங்களில் ஏற்படும் நஷ்டமே காரணமாக இருக்கலாம் என யாழ். வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். கடன் சுமையால் யாழில் 10 வீதமான வியாபார நிலையங்கள் இழுத்து மூடப்பட்டுள்ளன என அண்மையில் யாழ். வணிகர் கழகத் தலைவர் ஜெயசேகரம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (அ-4)


## கல்யாண மாலை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:- 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-புனர்பூசம் 3<br>உயரம்:-5'3"<br>கி.பா:-13.25<br>தகைமை/ தொழில்:-A/L கணனி, ஆங்கில அறிவு (சொந்தக்கடை)<br>B/701 | பிறப்பு:- 1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- மகம் 1<br>உயரம்: 5'<br>கி.பா:-12.25<br>தகைமை:- B.S.C. (Hons)<br>G/380 |
| பிறப்பு:- 1970 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- திருவோணம் 1<br>உயரம்:-5'6"<br>கி.பா:-63<br>தொழில்/ தகைமை:-B.Com final (இந்தியா) cima I,II (ஆங்கிலமொழிமூலம்) UK PR<br>B/246 | பிறப்பு:- 1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- அச்சுவினி 4<br>உயரம்: 5'3"<br>தகைமை: A/L Part time Computer work கனடா PR<br>G/381 |
| பிறப்பு:- 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-அச்சுவினி 4<br>உயரம்:-5'5"<br>கி.பா:-33.45<br>தொழில்:- Chartered Accountant<br>எதிர்பார்ப்பு:- சைவபோசனமாக இருத்தல் வேண்டும்<br>B/247 | பிறப்பு:- 1988 இந்துவேளாளர்<br>நட்சத்திரம்: அச்சுவினி 1<br>உயரம்: 5'2"<br>கி.பா: 50<br>தகைமை:- GAQ கணனி<br>G/382 |
| பிறப்பு:- 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-பரணி 1<br>உயரம்:-5'11"<br>கி.பா:-34<br>தொழில்:-BFA, HNDA அழகியற்கலை அரச ஆசிரியர்<br>B/248 | பிறப்பு:- 1972 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தரம் 1<br>உயரம்:- 5'4"<br>கி.பா: 20.25<br>தகைமை:- MBBS Doctor Dmo<br>G/383 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வாரத்தில் மட்டும் 78 பேர் பொலிஸாரால் கைது

யாழில் கடந்த வாரத்தில் 78 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

இவர்களில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 19 பேரும் கள்ளச்சாராயம் விற்ற 12 பேரும் சூழல் மாசடைவை ஏற்படுத்திய மற்றும் பொது இடங்களில் குப்பைகளை கொட்டிய 15 பேரும் மது போதையில் வாகனம் செலுத்திய 12 சாரதிகளும் சட்டவிரோதமாக மாடுகளினை ஏற்றிச் சென்ற மற்றும் வெட்டிய 7 பேரும் பொது இடங்களில் மது அருந்திய 6 பேரும் சட்டவிரோதமாக ஆடுகளினை ஏற்றிச் சென்ற 4 பேரும் குடித்துவிட்டு கலகம் விளைவித்த இருவரும் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற ஒருவருமாக மொத்தம் 78 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் முற்படுத்தப்பட்டு உள்ளதாக அவர் தெரிவித்தார். (அ-4)

# இவ்வாண்டு இறுதிக்குள் லக்சபான மின்விநியோகம்

இந்த வருட இறுதிக்குள் யாழ். மாவட்ட முழுவதும் லக்சபான மின்சார விநியோகம் இடம்பெறும் என இலங்கை மின்சார சபையின் யாழ். பிராந்திய மின் பொறியியலாளர் ஞானகணேசன் தெரிவித்தார்.

இதற்கான வேலைத்திட்டங்கள் தற்போது நடைபெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது மின் விநியோகம் அடிக்கடி தடைப்படுவது பற்றி எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

லக்சபான மின் விநியோகத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் 3 ஆயிரத்து 559 மில்லியன் செலவில் சுன்னாகத்தில் உப மின்நிலையம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த வேலைத்திட்டங்கள் யாவும் எதிர் வரும் டிசெம்பர் மாதம் அளவில் நிறைவு பெறும். இதனால் யாழ். குடா நாடு முழுவதும் 24 மணி நேரமும் தடையற்ற மின்சாரம் விநியோகம் நடைபெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## வல்வெட்டித்துறையில்

# சிறுமியை துஷ்பிரயோகம் செய்த இளைஞன் கைது

பாடசாலை சிறுமியொருவரை துஷ்பிரயோகத்திற்குட்படுத்திய இளைஞரொருவரை வல்வெட்டித்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

15 வயதுடைய குறித்த பாடசாலைச் சிறுமியை 26 வயதுடைய இளைஞரொருவர் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளார். குறித்த சம்பவம் வல்வெட்டித்துறைப் பகுதியில் இடம்பெற்றமையால் வல்வெட்டித்துறை பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் படி சம்பவம் நடைபெற்ற மறுதினமான கடந்த 31 ஆம் திகதி குறித்த வாலிபன் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். (அ-4)

# எப்போது நிறைவடையும் வீதி அகலிப்புப் பணிகள்

## அச்சுவேலி நகர் வீதியின் பரிதாபம்

(கரவெட்டி)

அச்சுவேலி நகரப் பகுதியில் வீதி அகலிப்பு பணிகள் கடந்த 6 மாதங்களுக்கு மேலாக ஆரம்பிக்கப்பட்ட போதிலும் இதுவரை அவ் வீதி அகலிப்புப் பணிகள் நிறைவடையவில்லை என மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அப்பணிகள் ஒப்பந்தகாரர்களினால் கைவிடப்பட்டுள்ளதாகவும் அவ்வீதியால் செல்லும் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. தற்போது மேற்படி வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுவதுடன் பாரிய கிடங்குகளும் காணப்படுகின்றன.

தற்பொழுது பெய்து வரும் கன மழையினால் அவற்றில் வெள்ளநீர் தேங்கி நின்று பாதசாரிகள், வீதியால் பயணிப்போர் மீது தெளிக்கப்படுவதாலும் சேறுகள் வீசப்படுவதாலும் அவ்வீதியால் போக்குவரத்து செய்ய முடியாதுள்ளது.

அத்துடன் அச்சுவேலியிலிருந்து வல்லைக்கு செல்லும் பிரதான வீதியின் அச்சுவேலி சந்தியில் பாரிய பாலம் ஒன்று நிர்மாணிக்கப்பட்ட போதும் அவ்வேலைத்திட்டமும் நிறைவடையவில்லை.

எனவே இவ்விடயங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-9-24)

# அனுரகுமார திஸாநாயக்கவின் கருத்து கொலை அச்சுறுத்தல் விடுகிறது

## அஸ்வர் எம்.பி. முறைப்பாடு

ஜனநாயக தேசிய கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்துகள் மூலம் தனக்கு கொலை அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக ஆளும் கட்சி ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர், சபாநாயக்கர் சமல் ராஜபக்ஷ முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த அச்சுறுத்தலானது தனக்கு மேற்கொள்ளப்பட்ட தனிப்பட்ட ரீதியான அச்சுறுத்தல் அல்ல எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஒன்று எனவும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு அஸ்வர் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (2-9)

# கேள்வி அறிவித்தல்
# பிரதம செயலாளர் செயலகம்
# வட மாகாணம்.

## பாவனைக்குட்பட்ட வாகனங்களின் விற்பனை

1. பிரதம செயலாளர் - வ.மா அவர்களால் வட மாகாண சபைக்குட்பட்ட திணைக்களங்களின் பாவனையிலிருந்த வாகனங்களை விற்பனை செய்வதற்காக தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொதியிடப்பட்ட கேள்வி மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களை எழுத்துமூலமான கோரிக்கையுடன் ரூபா 1,000/= மீளளிக்கப்படாத தொகையினைக் காசாகச் செலுத்தி 02.11.2012 ஆம் திகதி தொடக்கம் 22.11.2012 ஆம் திகதி வரை மு.ப. 9.30 தொடக்கம் பி.ப.4.00 மணி வரையான காலப்பகுதியில் பின்வரும் திணைக்களங்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

அ.மாகாணத் திறைசேரி, வட மாகாணம், 79/2, றக்கா வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

ஆ.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை -வவுனியா, மன்னார் வீதி, வவுனியா.

இ. பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை -மன்னார், தாழ்வுபாடு வீதி, மன்னார்.

ஈ. பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை- கிளிநொச்சி, கண்டி வீதி, கிளிநொச்சி.

உ. மாகாணக் கல்வித் திணைக்களம் -கிழக்கு மாகாணம், உவர் மலை, திருகோணமலை.

3.கேள்விதாரர்கள் இவ் வாகனங்களை 02.11.2012 ஆம் திகதி தொடக்கம் 22.11.2012 ஆம் திகதி வரை மு.ப. 9.30 தொடக்கம் பி.ப. 4.00 மணி வரை தரிப்பிடங்களில் பார்வையிடலாம். விற்பனைக்குரிய வாகனங்களின் விபரங்களும், பார்வையிடக்கூடிய தரிப்பிடங்களின் பெயர் விபரங்களும் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளன.

4. சகல கேள்விதாரர்களும் தாம் விலைக்கேள்வி ஆவணங்களில் குறிப்பிட்ட விலையில் 10% பெறுமதிக்கு கேள்விப் பிணைப் பொறுப்பு ஒன்றை கேள்வி ஆவணத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

5.இப் பிணைப் பொறுப்பானது **பிரதம செயலாளர் -வட மாகாணம்** எனும் பெயரிற்கு அரச வங்கியில் பெற்றிருத்தல் வேண்டும். பிணைப்பொறுப்பு 23.11.2012 ஆம் திகதியிலிருந்து அறுபது (60) நாட்களுக்கு வலுவில் இருத்தல் வேண்டும்.

6. ஒரு கேள்விதாரர் ஒன்றுற்கு மேற்பட்ட வாகனங்களுக்கும் விலைக்கேள்வி ஆவணங்களைச் சமர்ப்பிக்கலாம். ஆனால் ஒவ்வொரு வாகனங்ளுக்கும் தனித்தனியான விலைக் கேள்வி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

7. விலைக்கேள்விகள் உள்ளடக்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **வாகன விற்பனை வாகன இல:..........................** எனக் குறிப்பிட்டு 23.11.2012 ஆம் திகதி அன்று பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிரதம செயலாளர் கேள்விச் சபை, மாகாணத் திறைசேரி - வ.மா, 79/2, றக்கா வீதி, சுண்டுக்குளி என்ற முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்திய விலைக் கேள்விகள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிட்ட முகவரியில் 23.11.2012 ஆம் திகதி 2.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்.

8. கேள்வி மனுப்பத்திரம் 60 நாட்களுக்குச் செல்லுபடியானதாகும்.

9. இக் கேள்விகோரலில் கேள்விச் சபைத் தீர்மானமே இறுதியானதாகும்.

**வாகனங்கள் பார்வைக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இடங்கள்**

| இல | வாகனங்களின் விபரம் | | வாகனத் தரிப்பிடம் |
|---|---|---|---|
| 1 | 17-8548 | Jeep-Maruti | பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை- வவுனியா, மன்னார் வீதி, வவுனியா |
| 2 | 16-8311 | Jeep-Maruti | |
| 3 | 17-8546 | Jeep-Maruti | |
| 4 | 16-8292 | Jeep-Maruti | |
| 5 | 17-5846 | Jeep-Maruti | |
| 6 | 53-0904 | Pick-Up, Mitsubishi | |
| 7 | 50 Sri 7597 | Crewcab, Volkswagon | |
| 8 | 16-8315 | Jeep-Maruti | வலயக் கல்வி அலுவலகம்- யாழ்ப்பாணம் செம்மணி வீதி, நல்லூர் |
| 9 | 52-7519 | Pick-Up, Mitsubishi | |
| 10 | 16-0221 | Car | |
| 11 | 17-8547 | Jeep-Maruti | பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை- மன்னார் தாழ்வுபாடு வீதி, மன்னார் |
| 12 | 32-7433 | Jeep-Mitsubishi | |
| 13 | 31 Sri 4593 | Jeep-Mitsubishi | |
| 14 | 68-7669 | Ambulance | |
| 15 | HH-6672 | Ambulance | பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை- கிளிநொச்சி கண்டி வீதி- கிளிநொச்சி. |
| 16 | 17-8540 | Jeep-Maruti | வாகனத் தரிப்பிடம், உட்துறைமுக வீதி, திருகோணமலை. |

**ர.விஜயலட்சுமி**

**பிரதம செயலாளரும், தலைவர்- பிரதம செயலாளர் கேள்விச் சபையும்**

**வட மாகாணம்** (C-1423)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்குத் தேர்தல் உறுதிமொழிக்காக ஹக்கீமுக்கு கூடுதல் பொறுப்பு?

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தற்போது வகிக்கும் நீதி அமைச்சுக்குப் பதிலாக வேறு ஒரு பொறுப்பு வாய்ந்த அமைச்சுப் பதவியும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவருக்கும் விரைவில் பிரதி அமைச்சர் பதவியும் வழங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாங்கம், கிழக்கு மாகாண சபையின் ஆட்சியைக் கைப்பற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஆதரவைப் பெறுவதற்காக வழங்கிய உறுதி மொழிகளுள் இந்த விடயமும் அடங்கி இருந்ததாக முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தவிசாளர் பஷீர் சேகு தாவூதுக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவியும் மேலும் மூன்று எம்.பிக்களுக்கு பிரதி அமைச்சர் பதவிகளும் வழங்கப்பட வேண்டும் என்று அரசாங்கத்துடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்தி இருந்தது.

அந்த உடன்பாட்டின் பேரிலேயே கிழக்கு முதலமைச்சர் பதவியை முஸ்லிம் காங்கிரஸ் விட்டுக் கொடுத்தது என்றும் குறித்த முக்கியஸ்தர் சுட்டிக்காட்டினார்.

இந்த விடயத்தை நேற்று முன்தினம் ஜனாதிபதியை சந்தித்த அமைச்சர் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் குழுவினர் வலியுறுத்தியதாகவும் அதற்கு ஜனாதிபதி பச்சைக்கொடி காட்டி இருப்பதாகவும் அறிய முடிகிறது.

எவ்வாறாயினும்ஹக்கீமின்அமைச்சுப் பதவி மாற்றத்துடன் மு.கா.வின் இரண்டு எம்.பிக்களுக்கு பிரதி அமைச்சர் பதவி வழங்கப்படலாம் என்றும் அதில் ஒருவராக பஷீர் சேகு தாவூத் இருப்பார் எனவும் கட்சியின் உயர் மட்டம் நம்புவதாக தெரிவிக்கப்படுகிறது.

மீதியாகவுள்ள ஒரு பிரதி அமைச்சர் பதவி யாருக்கு வழங்கப்படும் என்பதை இப்போதைக்கு உறுதியாக கூற முடியாது என்றும் அந்த முக்கியஸ்தர் குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டு அரசாங்கத்தில் முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து கொண்டது முதலே அக்கட்சியின் எம்.பிக்களான ஹசன் அலி, பைசால் காசிம், ஹரீஸ், தௌபீக் ஆகியோர் பிரதிஅமைச்சர்பதவியில்குறிவைத்து பயணித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-9)

# சண்முகலிங்கத்தின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு

## கலாநிதி ஆறு.திருமுருகன் இரங்கல்

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலன சபையின் தலைவர் சண்முகலிங்கத்தின் பிரிவு மிகுந்த வேதனை தருகிறது. சைவபரிபாலன சபையின் சொத்துக்களைக் காப்பதற்காக அல்லும் பகலும் உழைத்தவர். சிதம்பரத்திலுள்ள புண்ணிய நாச்சியாரின் மடத்தைப் புனர்நிர்மாணம் செய்து ஈழத்தமிழ் மக்கள் இலவசமாகத் தங்குவதற்கு பேருதவி புரிந்தவர். சைவத்தமிழ் அறிஞர்களை ஒன்றிணைத்து பல்வேறு சைவ மகாநாடுகளை நடத்திய பெருமைக்குரியவர். சைவபரிபாலன சபையின் ஆணிவேராக நின்ற இப்பெருந்தகையின் இழப்பு சைவமக்களுக்கு ஈடுசெய்யமுடியாத இழப்பென்றால் மிகையாகாது. அன்னாரின் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல ஸ்ரீ துர்க்கா தேவியைப் பிரார்த்தித்து இதய அஞ்சலிகளைச் சமர்ப்பிக்கிறேன். (எ)

# மட்டக்களப்பில் தொழில் வாய்ப்பற்ற இளைஞர், யுவதிகளுக்கு செயற்றிட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழில் வாய்ப்பற்ற கல்வி கற்ற இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் விசேட செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் முதல் கட்டமாக மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேசத்துக்குட்பட்ட இளைஞர், யுவதிகளுக்கான தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கும் வகையிலான தொழிற்சந்தை மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் முதல் நடைபெற்று வருகின்றது.

தேசிய உற்பத்தித்திறன் அமைச்சின் மனிதவள வேலைவாய்ப்பு திணைக்களம் இதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழில் வாய்ப்பற்ற இளைஞர், யுவதிகளை அரச தொழில் மட்டுமன்றி தனியார் துறைகளுக்குள்ளும் உள்வாங்கும் நோக்குடன் இந்த செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட செயலக மனிதவள அபிவிருத்தி மாவட்ட இணைப்பாளர் தெரிவித்தார்.

இந்த தொழிற்சந்தையில் 10 இற்கும் மேற்பட்ட தொழில் வழங்கும் நிறுவனங்கள் தமது சேவையை வழங்கியிருந்ததுடன் மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேசத்துக் குட்பட்ட சுமார் 500 இற்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் இதன் போது பயனடைந்துள்ளதாக மண்முனை வடக்கு பிரதேச செயலக மனிதவள உத்தியோகத்தர் மைக்கல் கொலின் தெரிவித்தார். (2-9)

# தமிழ் அரசியல் கட்சிகள் மரண அச்சுறுத்தல் விடுக்கின்றன

## மட்டக்களப்பு விகாராதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் அசியல் கட்சிகள் மரண அச்சுறுத்தல் விடுப்பதாக மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள மங்களராம விகாரையின் பீடாதிபதி அம்பிட்டிய சுமனரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ அரசியல் கட்சிகளினால் தமக்கும் சிங்கள மக்களுக்கும் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருகின்றன. தமக்கும் பிரதேச சிங்கள மக்களுக்கும் இழைக்கப்படும் அநீதிகள் தொடர்பில் உடனடியாக விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இந்த முறைப்பாடு தொடர்பில் கவனம் செலுத்துமாறு சுமனரத்ன தேரர் ஜனாதிபதியிடம் கோரியுள்ளார்.

மட்டக்களப்பு சிட்டிமடு மற்றும் கெவிலியா மடுவ ஆகிய பிரதேசங்களில் 90 சிங்கள குடும்பங்கள் குடியேற்றப்பட்டது முதல் இவ்வாறு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடு சுதந்திரமடைந்துள்ள நிலையில் கிழக்கில் பௌத்த சமய வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகளுக்கு தமிழ் அரசியல் கட்சிகள் தடை ஏற்படுத்தி வருவதாகவும் தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (2-9)

# கலை, கலாசார விழா ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் , ஊரெழு கலை கலாசார மன்றத்தினால் நடத்தப்படவிருந்த கலை கலாசார விழா தற்போது நிலவுகின்ற சீரற்ற காலநிலை காரணமாக எதிர்வரும் ஜனவரி மாதத்திற்கு ஒத்திவைத்துள்ளதாக மன்ற தலைவர் க.ஆனந்தராஜா அறிவித்துள்ளார். இவ்விழா பாரம்பரிய கலைகளை ஊக்குவிக்கும் நோக்கில் கோப்பாய் பிரதேச செயலக ஆதரவுடனும் கிராம மக்களின் நிதிப்பங்களிப்புடனும் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ-9)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2012.11 03

★1493-கரிபியன் கடலில் டொமினிக்காத் தீவை முதன் முதலில் கொலம்பஸ் கண்டார்.

★1655-பிரான்சும் இங்கிலாந்தும் இராணுவப் பொருளாதார ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

★1812-நெப்போலியனின் இராணுவத்தினர் வியாஸ்மா என்ற இடத்தில் இடம் பெற்ற போரில் தோற்றனர்.

★1838-பாம்பே டைம்ஸ் முதன் முதலில் வெளியிடப்பட்டது. இது பின்னர் 1861 இல் டெம்ஸ் ஆஃப் இந்தியான எனப் பெயரிடப்பட்டது.

★1903-ஐக்கிய அமெரிக்காவின் தூண்டுதலை அடுத்து பனாமா கொலம்பியாவிடம் இருந்து தனது விடுதலையை அறிவித்தது.

★1905-ரஷ்யாவின் இரண்டாம் நிக்கலாஸ் அரசியல் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்க உத்தரவிட்டான்.

★1913-ஐக்கிய அமெரிக்கா வருமான வரியை அறிமுகப்படுத்தியது.

★1918-போலந்து ரஷ்யாவிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

★1943-இரண்டாம் உலகப்போர்: ஜேர்மனியின் வில்ஹெம்ஷாஃபென் துறைமுகத்தை அமெரிக்காவின் சுமார் 500 போர் விமானங்கள் தாக்கி அழித்தன.

★1957-உலகில் முதன் முதலில் மிருகம் ஒன்றை (லைக்கா என்னும் நாயை) சோவியத் ஒன்றியம் ஸ்புட்னிக் 2 விண்கப்பலில் விண்வெளிக்கு அனுப்பியது.

★1963-தி.மு.க. செயற்குழு திராவிட நாடு, தனிநாடு கோஷத்தைக் கைவிடுவதாக அறிவித்தது.

★1963-ஜெய்பூரில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரசின் மாநாட்டில் காமராசர் அதன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

★1964-வோஷிங்டன் டீசி மக்கள் முதன் முறையாக அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டார்கள்.

★1970-சல்வடோர் அலெண்டே சிலியின் ஜனாதிபதியானார்.

★1973-நாசா மரைனர் 10 என்ற விண்கப்பலை புதன் நோக்கி அனுப்பியது.

★1974-மார்ச் 29 இல் அக்கோளை அடைந்த முதலாவது விண்கலம் இதுவாகும்.

★1978-டொமினிக்கா ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.

★1982-ஆப்கானிஸ்தானில் சலாங் சுரங்கத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 2 ஆயிரம் பேர் வரையில் உயிரிழந்தனர்.

★1986-மைக்குரோனீசியா கூட்டு நாடுகள் ஐக்கிய அமெரிக்காவிடம் இருந்து விடுதலை பெற்றது.

★1938-இலங்கையின் தமிழ்க் குழுவான • தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினரால் மாலைதீவுகள் அரசை அகற்ற எடுக்கப்பட்ட முயற்சி இந்திய இராணுவத்தினரால் 24 மணி நேரத்தில் முறியடிக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

★1795-ஜேம்ஸ் போக், ஐக்கிய அமெரிக்காவின் 11 ஆவது குடியரசுத் தலைவர் (இ.1849)

★1911-ஏ.கே.செட்டியார், தமிழில் பயண இலக்கியத்தின் முன்னோடி (இ.1983)

★1933-அமர்த்தியா சென், இந்தியப் பொருளாதார நிபுணர், நோபல் பரிசு பெற்றவர்.

### இறப்பு

★2006-ஈ.வி.சரோஜா, தமிழ்த் திரைப்பட நடிகை (பி.1935)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதித்துறைக்கு வேட்டு வைக்க முயற்சிக்கிறது அரசாங்கம்

## அனுரகுமார எம்.பி.தெரிவிப்பு



ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(கொழும்பு)

**பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க எதிரான அரசியல் குற்றவியல் பிரேரணைக்காக பெறப்பட்டுள்ள கையெழுத்துக்கள் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதன் சிரேஷ்ட உறுப்பினர்களின் நிலைப்பாடுகளுக்கு அமைய பெறப்பட்டவை அல்ல எனவும் பலவந்தமாக பெறப்பட்ட கையெழுத்துக்கள் எனவும் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் குற்றவியல் பிரேரணை கொண்டு வருவதற்காக உரிய காரணம் அதில் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.நிறைவேற்று அதிகாரம் கொண்டவரினால் தற்போது நீதிமன்றத்தின் மீது கடும் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன.ஏற்பட்டுள்ள புதிய நிலைமை தொடர்பில் ஜே.வி.பி.யின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியாக வேண்டும்.இந்த அரசாங்கம் சர்வாதிகார நோக்கில் ஜனநாயக விரோதமான வெறியில் செயற்பட்டு வரும் அரசாங்கமாகும்.தமது சர்வாதிகார வெறிக்கு தடையாக இருக்கின்ற நிறுவனங்கள் நபர்களை விரட்டியடிக்கும், அழிக்கும் முறையை இந்த அரசாங்கம் பின்பற்றி வருகின்றது.

கடந்த காலங்களில் இந்த சர்வாதிகார வெறி தமக்கு தடை ஏற்படுத்தும். ஊடகங்கள் மீது தாக்குதல் நடத்தி அந்த நிறுவனங்களை தூள்தூளாக்கி ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தி நாட்டிலிருந்த வெளியேற்றி வந்தது. இறுதியில் அவர்களை கொலை செய்யும் நிலைமைக்கு மாறியது. எந்த நிறுவனத்தை சேர்ந்த நபர்களும் தமது பணிகளை சுயமாக முன்னெடுத்து செல்ல அனுமதிப்பதில்லை.இந்த செயற்பாடுகளில் பாரதூரமான பொறியாக நீதித்துறைக்கு மாறியுள்ளது.

ஊடகங்களுக்கு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்த நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ன நீதித்துறையில் மேல் இடத்தின் தலையீடுகள் இருப்பதாக தெரிவித்திருந்தார்.இந்த நிலைமையை தெளிவுபடுத்தி அதனை தீர்த்து கொள்ள முடிந்ததாக கூறியிருந்தார்.

அத்துடன் நீதித்துறையின் மீது பிரயோகிக்கப்படும் அழுத்தங்களுக்கு பயப்படாது முன்னோக்கி சென்று நீதித்துறையின் சுதந்திரத்திற்காக செயற்பட தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

நீதி சேவைகள் ஆணைக்குழுவின் சட்ட திட்டங்களின் படி ஆணைக்குழு எடுக்கும் தீர்மானங்கள் குறித்து அறிவிக்க மாத்திரமே முடியும். ஆணைக்குழுவின் அனுமதியுடனே அவர் செயற்பட முடியும்.அதனால் நீதித்துறை ஆணைக்குழுவின் தகவலாளி மாத்திரமே. இதனால் அவர் நீதித்துறையில் ஏற்படுத்தப்படும் அழுத்தங்கள் குறித்து தகவலை வெளியிட்டவர்கள் ஆணைக்குழுவின் தலைவரான பிரதம நீதியரசர், உயர் நீதிமன்றத்தின் நீதியரசர்கள் அடங்கிய ஆணைக்குழுவின் உறுப்பினர்களாகும். எனினும் தவறான நபர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மஞ்சுள திலகரட்ன மீது தாக்குதல் நடத்தப்பட்டமை குறித்து அரசாங்கம் இதுவரை உரிய விசாரணைகளை நடத்தவில்லை. எவரையும் கைது செய்யவில்லை. எவரையும் நீதிமன்றத்தில் நிறுத்தவில்லை .

இதற்கு பதிலாக அந்த தாக்குதல் சம்பவம் குறித்து சேறுபூசும் பிரசாரங்களை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

நாடாளுமன்ற சம்பிரதாயங்களுக்கு முரணான வகையில் ஜனாதிபதிக்கு வந்தமாக கூறப்படும் பெயர் குறிப்பிடாத நபரின் கடிதம் ஒன்று அவரது பிரதிநிதியான பிரதியமைச்சர் ஒருவரான ஜயரத்ன ஹேரத்தினால் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.அந்த கடிதத்தில் மஞ்சுள திலகரட்ன மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பாக சேறுபூசும் விடயங்கள் அடங்கியிருந்தன.

தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட உண்மையான சந்தேக நபரை கண்டுபிடிப்பதற்குப் பதிலாக அரசாங்கத்தினால் பிரதம நீதியரசருக்கும் மஞ்சுள திலகரட்னவுக்கும் அவதூறு ஏற்படுத்தும் பிரசாரங்களை அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது. நாடாளுமன்ற சம்பிரதாயங்களை மீறி அதனை அரசாங்கம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தது. அத்துடன் தாக்குதல் சம்பவத்தை வேறு ஒரு நபர் மீது சுமத்தும் நடவடிக்கைகளிலும் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

இதனை செய்ய என்ன காரணம்? உண்மையில் தாக்குதல் நடத்தியவர்களை பாதுகாக்க வேண்டும் என்ற காரணத்தினால் அரசாங்கம் இதனை செய்கிறது. இதன் மூலம் நீதித்துறை தமது இஷ்டத்திற்கு கொண்டு வர அரசாங்கம் முயற்சித்து வருவதாகவும் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.(அ-2)

## புகையிலை மீதான வரியை அதிகரிக்குமாறு கோரிக்கை

நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்படவுள்ள 2013 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் புகையிலை மீதான வரியை அதிகரிக்குமாறு மருத்துவ வாண்மையாளர்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புகையிலை மீதான வரியை அதிகரிப்பதன் மூலம் 100 பில்லியன் ரூபாவினால் அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்க முடியும். புகைபிடிப்போர் அதை கைவிடுவதற்வழிவகுக்கும் எனவும் அச்சங்கம் தெரிவித்துள்ளது.

புகையிலை வரி மூலம் அரசாங்கம் 400 பில்லியன் ரூபாயை வருவாயாக பெறுகின்றது.இதனை இன்னும் அதிகரிக்க முடியும் என புற்றுநோய் பாதுகாப்பு சங்கம் குறிப்பிட்டுள்ளது.

புகைப்பொருள் விலையை அதிகரிக்கும் போது அதன் கேள்வி 2013 ஆம் ஆண்டு குறையும் என்பதை கணக்கிலெடுத்து பார்த்தாலும் புகையிலை வரியை அதிகரிப்பதனால் 100 பில்லியன் ரூபாவை கூடுதல் வருவாயாக பெறமுடியும் என சங்கத்தின் தலைவர் டாக்டர் சமதி ராஜபக்ஷ தெரிவித்தார்.

புகையிலையின் விலையை 10 சதவீதத்தால் அதிகரிக்கும் போது உயர் வருமான நாடுகளில் புகைபொருளின் நுகர்வு 4 சதவீதத்தினாலும் குறைந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகளில் நுகர்வு 8 சதவீதத்தினாலும் குறைகின்றது என உலக வங்கியின் ஆய்வு தெரிவித்துள்ளது என அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் வருடம்தோறும் புகைத்தலினால் 20 ஆயிரம் பேர் மரணமடைகின்றனர். தொற்று வகைக்குள் வாராத நோய்கள் பலவற்றுக்கு புகைத்தல் காரணமாகின்றன. இதனால் பாதிக்கப்படுபவர்கள் உற் பத்தியாற்றல் கொண்டவர்களாக இருப்பதால் நாட்டின் உற்பத்தியில் இது பாதகமான விளைவை ஏற்படுத்தும் என டாக்டர் சமதி ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். (அ-2)

## ஆஸியில் இருந்து 26 பேர் திருப்பி அனுப்பப்பட்டனர்

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவில் அமைந்துள்ள கிறிஸ்மஸ் தீவில் இருந்து 26 இலங்கையர்கள் திருப்பியனுப்பப்பட்டனர்.

இவர்கள் நேற்று முன்தினம் இரவு இலங்கைக்கு அனுப்பப்பட்டனர்.

விசேட விமானம் ஒன்றில் அவர்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டதாக அவுஸ்திரேலிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்கள் படகுமூலம் இந்த வார ஆரம்பத்தில் அவுஸ்திரேலியாவுக்கு சென்றவர்கள் ஆவர்.

இந்த நிலையில் அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசித்தமை, உரிய விசா அல்லது சட்ட முறைகளை கடைப்பிடிக்காமை காரணமாக குறித்த 26 பேரும் திருப்பியனுப்பப்பட்டதாக அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் கிறிஸ் போவன் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே அவுஸ்திரேலியாவில் இருந்து 116 இலங்கையர்கள் சுயமாக அல்லது பலாத்கரமாக திருப்பியனுப்பப்பட்டுள்ளனர் என்றும் போவன் தெரிவித்துள்ளார். (அ-2)





யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியர்தின நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் உட்பட அதிபர், ஆசிரியர்கள் மங்கள வாத்தியத்துடன் வரவழைத்து வரப்படுவதையும் யாழ்ப்பாணம் கோட்டக்கல்வி பணிப்பாளர் சண்முககுலகுமாருக்கு கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில் வேந்தன் நினைவுப்பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள் :-மல்லாகச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

௧௦

## போர்த்துக்கேயர் காலம்

கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா

### நாடுகாண் பயணங்கள்

10 ஆம் நூற்றாண்டிலிருந்து கிழக்கு ஆசியாவிலிருந்து தரை மார்க்கமாக வியாபாரப் பொருட்களை ஐரோப்பிய நாடுகளுக்கு எடுத்து வந்து வர்த்தகம் செய்தவர்கள் முஸ்லிம்கள் ஆவர். வாசனைத் திரவியங்கள், பட்டுத்துணி வகைகள் என்பவற்றின் வர்த்தகத்தில் தனியுரிமையை முஸ்லிம்கள் பெற்றிருந்தனர். இத் தரைவழிப் பாதையின் முக்கிய மையமாக கொன்ஸ்தாந்திநோபிள் விளங்கியது. அதனை இன்று இஸ்தான்புல் என்பர். கிறிஸ்தவர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையில் நீண்டகாலமாக நிகழ்ந்த சிலுவை யுத்தம் காரணமாக, கொன்ஸ்தாந்நோபிள் முஸ்லிம் வசமாயிற்று. அதனால் கிழக்கு உலகிலிருந்து ஐரோப்பிய நாடுகள் பெற்றுவந்த வர்த்தகப் பொருட்களைப் பெறுதல் சிரமமானது. அதனால் கிழக்குலகிற்குப் புதிய மார்க்கம் கண்டுபிடிப்பது அவசியமாயிற்று. 1453 களில் முஸ்லிம்கள் கிழக்கில் உருவாக்கியிருந்த பொருளாதாரபலம் காரணமாகக் கிறிஸ்தவர்களை அவர்களால் தோற்கடிக்க முடிந்தது. அவர்களின் வியாபார ஏகபோகத்தை முறியடித்து தமது பொருளாதார பலத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டிய அவசியம் போர்த்துக் கேயருக்கு இருந்தது. கிழக்கு நாடுகளில் பரவிவரும் இஸ்லாம் சமயத்தினை அழித்தொழித்து தமது கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவது அவசியமானதாகக் கருதப்பட்டது.

மேற்கு ஐரோப்பிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் நாடுகாண் பயணங்களுக்குத் தூண்டுதலாக இருந்தன. திசையறிகருவி, வடமீன் கணிப்புக் கருவி, பாதுகாப்பான கப்பல்கள், கடற்பிரயாணப் பயிற்சிகள் என்பன கடற்பயணங்களுக்கு வாய்ப்பாக இருந்தன. போர்த்துக்கல் மன்னன் கடலோடி ஹென்றியின் இடைவிடாத தூண்டுதல்கள் கடற் பயணங்களுக்கு உதவின. கடற்பிரயாணம் பற்றிக் கற்பதற்கும் ஆராய்ச்சி செய்வதற்கும் போர்த்துக்கல்லில் இம்மன்னன் ஓர் ஆராய்ச்சி நிலையம் அமைத்தான். அதனால் பயிற்சி பெற்ற மாலுமிகள் உருவாகினர். நாடுகாண் பயணங்கள் மூலம் புதிய நாடுகளைக் கண்டுபிடித்து தமது ஆட்சிப்பரப்பினை விரிவுபடுத்தலாமென மன்னர்கள் எண்ணினர். கிறிஸ்தவ மதத்தைப் பரப்பலாமென வும் எண்ணினர். வர்த்தக நடவடிக்கைகள் மூலம் அதிக இலாபத்தினை ஈட்டலாமென வியாபாரிகள் எண்ணினர். நாடுகாண் பயணங்களில் பார்தலோமியோ டயஸ், கிறிஸ்தோபர் கொலம்ஸ், வாஸ்கொடகாமா, பேடினன்ட் மகலென், ஜேம்ஸ்குக் முதலானவர்கள் ஈடுபட்டு புதிய கடற்பாதைகளையும் ஐரோப்பியருக்கு, முன்னர் அறிமுகமில்லாத நாடுகளையும் கண்டுபிடித்தனர்.



போர்த்துக்கேயர் இலங்கையை அடைந்தமையச் சித்தரிக்கும் சித்திரம்

1497 இல் வாஸ்கொடகாமா என்பவன் போர்த்துக்கல் மன்னன் இமானுவேல் என்பவரின் அனுசரணையுடன் லிஸ்பனிலிருந்து புறப்பட்டு, தென்னாபிரிக்காவைச் சுற்றிப் பயணப்பட்டு, நன்னம்பிக்கை முனையைக் கடந்து, 1498 இல் தென்னந்தியாவின் கலிகட் துறைமுகத்தை வந்தடைந்தான். கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதற்காகவும் வாசனைத் திரவியங்களைப் பெறுவதற்காகவும் நாங்கள் இந்தியாவிற்கு வந்தோம் என வாஸ்கொடகாமா குறிப்பிட்டான். கிழக்கிற்கு வந்த போர்த்துக்கேயர் இந்து சமுத்திர நாடுகளில் முஸ்லிம்களின் செல்வாக்கையும் விருத்தியடைந்திருந்த அவர்களின் வர்த்தகத்தினையும் கண்டனர். அதனால், முஸ்லிம்களின் வியாபாரத்தைக் கைப்பற்றுதல், போர்த்துக்கேயரின் முதல்தேவையாக அமைந்தது. அதனால், முஸ்லிம்களின் கப்பல்களை கைப்பற்றி அவற்றினைக் கொள்ளையிட்டனர். போர்த்துக்கேயரின் ஆயுதபலமும் முஸ்லிம் வியாபாரிகளினால் கடற்கொள்ளையரை எதிர்கொள்ள முடியாமையும் காரணமாக இந்து சமுத்திரத்தின் ஆதிபத்தியம் போர்த்துக்யேர் வசமாகியது.



வாஸ்கொடகாமா கலிகட் துறைமுகத்தை அடைந்தபோது- சித்திரம்

இந்தியாவில் கொச்சின், மலபார் போன்ற கரையோரப்பகுதிகளில் அவ்வப் பிரதேசமன்னர்களுடன் சிறப்பான முறையில் முஸ்லிம்கள் வர்த்தகம் செய்து வந்தனர். அம் மன்னர்களுடன் புதிதாகப் பேச்சு வார்தைகளை நடத்திய போாத்துக்கேயர் அவர்களின் ஆதரவினை பெற்றுக்கொண்டனர். அவ்வாறு ஒத்துழைப்பு வழங்கத் தவறிய கள்ளிக்கோட்டை போன்ற பிரதேசங்களை தாக்கி தமதாக்கிக் கொண்டனர். இவ்விடங்களில் முதலில் கோட்டைகளை அமைத்துக்கொண்டனர். 1507 இல் கிழக்கு நாடுகளின் போர்த்துக்கேயத் தளபதியாக இருந்தவன் அல்புஹர்க் என்பவனாவான்.

### இலங்கையில் காலடி வைத்தமை

லோரன்ஸ் டி அல்மேடா என்பவன் காலியில் வந்திறங்கி இலங்கையின் தென்மேற்கில் நிலைகொண்டான். 1505 ஆம் ஆண்டு முஸ்லிம்களின் கப்பல் ஒன்றினைத் துரத்தி வந்த போர்த்துக்கேயத் தளபதியான லோரன்ஸ் டி அல்மேரா தற்செயலாக காலித்துறைமுகத்தை வந்தடைந்தான். தாம் இலங்கைக்கு வந்தடைந்தமைக்காக மிகவும் மகிழ்ந்தனர்; தரவழியாகக் கொழும்பு வந்தனர். இலங்கைக்கு வருவதற்கு முன்னர் சிறந்த உற்பத்தி நாடாக இலங்கை இருப்பதை போர்த்துக்கேயர் அறிந்திருந்தனர். போர்த்துக்கேயரை முதன்முல் கண்ட சுதேசிகள் இலங்கை மன்னனிடம் அவர்களின் வருகையை வெளியிட்டனர். "அரசனே சிறிய கற்களைச் சாப்பிட்டும், இரத்தத்தை குடித்தும், அங்கும் இங்கும் அலையும் அபூர்வ மனிதர் கொழும்புக்கு வந்திருக்கிறார்கள். வாங்கும் பொருட்களுக்கு தரமான வெள்ளிக்காசுகளை வழங்குகிறார்கள். இரும்பு ஆடைகளும் தொப்பிகளும் அணிந்திருக்கிறார்கள். பீரங்கிகளில் இருந்து வெளியேறும் சத்தம் இடிமுழக்கம் போலிருக்கிறது".



பலானா கோட்டை

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

269

## கொலம்பஸ்

பதின்நான்காம் நூற்றாண்டில் நடந்த சம்பவம் இது. ஸ்பெயின் நாட்டிலிருந்து ஒரு கப்பல் புறப்பட்டது.

புதியன படைக்கவும் புதுமைகள் காணவும் துடிப்பான இருபது இளைஞர்கள் அக்கப்பலில் இருந்தனர். தலைவன் பெயர் கொலம்பஸ். வேண்டிய உணவு தண்ணீரும் கப்பலில் சேகரித்துக்கொண்டனர்.

அவற்றை வழங்கும் பொறுப்பு மாலுமிகளில் ஒருவரான ரோனால்ட்டுக்கு வழங்கப்பட்டது.

எதையாவது சாதித்து சரித்திரத்தில் பெயர் பொறிக்க வேண்டும் என்று ஆசைப்பட்ட மாலுமிகள் அனைவரும் பலநாட்கள் கூடிப்பேசி முடிவெடுத்துப் புறப்பட்டனர்.

இருபத்துநான்கு நாட்கள் சென்றன. முதலில் உற்சாகமாய் பேசிச்சிரித்து கும்மாளமிட்ட அவர்கள் ஒவ்வொருவராய் சோர்ந்து போக ஆரம்பித்தனர்.

எங்கே பார்த்தாலும் கடல்... நிலப்பகுதியை காணமுடியவில்லை. சமுத்திரத்தில் திமிங்கிலங்களுக்கு இரையாகப் போகிறோம் என்றான் ஒருவன்.

என் பெற்றோருக்கு நான் ஒரே பிள்ளை என்றான் இன்னொருவன்.

என் தங்கைக்கு நல்ல இடத்தில் திருமணம் பேசியிருக்கிறேன். நான் உங்களோடு வந்தது எத்தனை மடத்தனம் என்பது இப்போதுதான் புரிகிறது என்று புலம்பினான் மற்றவன்.

எனக்குக் குழந்தை பிறக்கப் போகிறது. பிறந்த உடனேயே தகப்பனை முழுங்கி விட்டவன் என்ற அவச்சொல்லை அடையப் போகிறது என்று கூறி அழுதான் இன்னொருவன்.

திடீரென்று புயல் வந்தால் எல்லோருமே பலி என்று ஒருவன் பயங்காட்டினான்.

எனக்கு இப்போதுதான் திருமணமானது. வரும்போதே நீங்கள் போகத்தான் வேண்டுமா? என்று அவள் அழுதாள் என்று கூறி மாலுமி தேம்பினான்.

ரோனால்ட் மாலுமிகளிடம் எல்லாவற்றையும் விட நம் எல்லோருக்கும் உணவும் தண்ணீரும் இன்னும் 24 நாட்களுக்கு மட்டுமே இருக்கிறது. அதனால் கட்டாயமாக நாம் கப்பலை ஸ்பெயினுக்குத் திருப்பியே ஆகவேண்டும் என்றான்.

இதைக்கேட்ட மாலுமிகள் எல்லோரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். அனைவரும் சேர்ந்து கப்பலின் மேல் தளத்தில் இருந்த கொலம்பஸை சந்தித்து நிலைமையை எடுத்துக்கூறினர்.

கொலம்பஸ் அவர்கள் சொல்வதை ஏற்கவில்லை.



உணவும் தண்ணீரும் கொண்ட இலட்சியத்திற்குக் குறுக்கே நிற்பதா? தோல்வியோடு ஊருக்குத் திரும்பினால் வாய்ச்சொல் வீரர்கள் என நண்பர்கள் கேலி செய்யமாட்டார்களா? பிறந்த அன்றே மரணம் விதிக்கப்பட்டு விடுகிறது.

மரங்களும் செடி கொடிகளும் மனிதர்களுக்கு கனிகளும் காய்களும் மலர்களும் தருகின்றன. நம்மால் இந்த உலகத்திற்கு ஏதாவது தரவேண்டும் என்று வாய் சலிக்கப் பேசியது எல்லாம் வீண்தானா என்றான்.

பாதியில் பின்வாங்குவது பேடித்தனம் அல்லவா? முன்வைத்த காலை பின்வைக்கலாமா? எக்காரணம் கொண்டும் வெற்றி காணாமல் ஊர் திரும்புவதில்லை... கப்பல் முன்நோக்கியே போக வேண்டும் என உறுதியாகச் சொல்லிவிட்டார் கொலம்பஸ்.

இது பிடிக்காத சிலர் அவரைக் கட்டிப்போட்டனர். ஸ்பெயின் நாட்டை நோக்கி கப்பலைத் திருப்பிவிடத் தீர்மானித்தனர்.

கொலம்பஸுக்கு அந்த நிலையிலும் தோழர்கள் மேல் கோபம் வரவில்லை. விரைவாகச் சிந்தித்து வேறொரு முடிவுக்கு வந்தார்.

ரோனால்ட்! தயவுகூர்ந்து என் அருகில் வா. கப்பலில் உள்ள உணவும் குடிநீரும் எத்தனை நாளுக்கு எத்தனை பேருக்கு வரும்? என்று கேட்டார்.

இருபது பேருக்கு 24 நாட்களுக்கும் வரும் என்றார் ரோனால்ட்.

அந்த 20பேரில் நானும் உண்டா? என்று கொலம்பஸ் கேட்டார்.

என்ன இப்படிக்கேட்டு விட்டாய்? நீ எங்கள் நண்பன் அல்லவா? அடம்பிடிக்கும் குழந்தையை அடிப்பது போலத்தான் உன்னைக் கட்டிப்போட்டுள்ளோம் என வேதனையோடு கூறினார் ரோனால்ட்.

அப்போது நான் சாப்பிடாமலும் தண்ணீர் குடிக்காமலும் ஒருநாள் முழுவதும் இருந்தால் என்னுடைய தண்ணீரும் உணவும் 19 பேருக்கு மேலும் ஒருநாள் வருமல்லவா? இந்த பசுபிக் மகா சமுத்திரத்தில் மேலும் ஒருநாள் என் கோரிக்கைப் படி கப்பல் பயணப்படட்டும்.

கரை எதுவும் தெரியாவிட்டால் என்னைக் கடலில் தள்ளிவிட்டு நீங்கள் 19 பேரும் ஸ்பெயின் செல்லுங்கள்.

இத்தனை நாள் பழகியதற்காக எனக்கு இந்த உதவி செய்யக்கூடாது என உருக்கமாக கொலம்பஸ் கேட்க நண்பர்கள் ஓ என்று கூச்சலிட்டு தங்கள் சம்மதத்தைத் தெரிவித்தனர்.

கொலம்பஸின் கட்டை அவிழ்த்தனர். கொலம்பஸ் உன் விருப்பப்படி கடற் பயணம் தொடரும். வெற்றி காண்போம்... அல்லது கடலில் மடிந்து புதுப்பிறவி எடுத்து நம் பணியைத் தொடர்வோம் என்றார் உணர்ச்சிவசப்பட்டு.

இருபது மணிநேரம் சென்றதும் கரை தெரிந்தது. பறவைகளின் ஒலிகள் காதை நிறைத்தன. அனைவரும் கொலம்பஸைக் கட்டிக் கொண்டு கண்ணீர் உகுத்தனர்.

இற்றைக்குப் பணக்காரக் கண்டம் என்று நாம் போற்றும் அமெரிக்காவைக் கண்டுபிடித்தவர் கொலம்பஸ்தான்.

சிக்கலான சூழ்நிலையிலும் கொள்கையை மாற்றிக் கொள்ளாமல் இலட்சியத்தை நோக்கி நடைபோட்ட கொலம்பஸுக்கு சரித்திரம் இருக்கிறது.

நீங்கள் ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொருவரும் சரித்திரம் படைக்கவேண்டும். கொண்ட கொள்கையை ஆராய்ந்து மேற்கொண்ட பின் என்ன இன்னல் வந்தாலும் கைவிடக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தபாயவின் சொற்பிரயோகங்கள் இனமோதலையே ஏற்படுத்தும்

## சுரேஷ் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

பாதுகாப்புச் செயளாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் செயற்பாடுகள் தமிழ், சிங்கள மக்கள் மத்தியில் இருக்கும் ஓரளவுக்கான நல்லிணக்கத்தையும் மேலும் சீர்குலைக்கும் என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ 13 ஆவது அரசியல் அமைப்பு திருத்தச் சட்டம் இரத்துச் செய்யப்பட வேண்டும் என தெரிவித்திருந்தமை, தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் இல்லை என கூறியிருந்தமை, வடக்கு, கிழக்கில் உள்ள இராணுவ முகாம்கள் எதுவும் அகற்றப்பட மாட்டாது என கூறியிருந்தமை உள்ளிட்ட அரசாங்கத்தின் அதிகாரி ஒருவருக்கு இருக்கும் அதிகாரத்தை மீறி வெளியிட்டிருந்த சர்ச்சைக்குரிய விடயங்கள் குறித்து கருத்து வெளியிடும் போதே சுரேஷ் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

உண்மையில் அவரது நடத்தையானது ஒருவகையான நாடகமாகும். நாட்டிற்குள் என்ன நடக்கின்றது என்பதை அறியாது அவர் நடிக்கின்றார்.

இலங்கை பிரித்தானியாவிடம் இருந்து சுதந்திரம் பெற்ற நாளில் இருந்து தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான புறக்கணிப்பு மற்றும் பாரபட்சங்கள் இருந்து வருகின்றன.

தமிழ் மக்களுக்கு தீர்க்கப்படாத முக்கியமான பிரச்சினைகள் பல இருக்கின்றன. இது அனைவரும் அறிந்த விடயமாகும். இதுவரை இலங்கையில் ஆட்சி செய்த ஜனாதிபதிகள், பிரதமர்கள் என அனைவரும் இதனை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இந்த பிரச்சினையானது இலங்கையின் அரசியலில் முதன்மையான பிரச்சினையாகும். தமிழ் மக்களுக்கு அவர்களின் அரசியல் உரிமைகள் அவசியமாகும்.

அதற்கான நேர்மையான அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பது அவசியமாகும்.

பாதுகாப்பு செயலாளரின் தன்னிச்சையான செயற்பாடுகள் மற்றும் கருத்துக்கள் தமிழ், சிங்கள மக்கள் மத்தியில் மேலும் விரிசலை ஏற்படுத்தும்.

தமிழ் மக்களும் சிங்கள மக்களும் மீண்டும் ஒருபோதும் இணைந்து ஒரு நாட்டில் வாழ முடியாத நிலைமையை பாதுகாப்புச் செயலாளர் உருவாக்கி வருகிறார். ஏதேனும் ஒன்றை தெரிவிக்கும் முன்னர் தாம் எதனை கூறுகிறோம் என்று கவனத்துடன் கருத்துக்களை வெளியிட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். (அ-2)

# தென்னங்கன்றுகள் விநியோகம்

(பூந்தோட்டம்)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வவுனியா தெற்கு வலயத்தில் உள்ள 42 பாடசாலைகளில் தரம் 6 இல் கல்வி கற்கும் 2 ஆயிரத்து 349 மாணவர்களுக்கு தலா இரண்டு தென்னங்கன்றுகள் அடிப்படையில் 4 ஆயிரத்து 698 தென்னங் கன்றுகள் வழங்கியுள்ளது.

இத் தென்னங்கன்றுகளை வவுனியா தெற்கு வலய விவசாய பாட ஆசிரிய ஆலோசகர் பத்மநாதன், வவுனியா தென்னை பயிர்ச்செய்கை அபிவிருத்தி உத்தியோகத்தர் அஸ்வர் ஆகியோர் மாணவர்களுக்கு வழங்கி வைத்தனர். (அ-9-266)

# இலங்கை விவகாரம் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படவில்லை

## சர்வதேசத்தை சாடுகிறது சூடான்

(கொழும்பு)

இலங்கை விவகாரம் தொடர்பில் சர்வதேச சமூகம் கூடுதல் கவனம் செலுத்த தவறியுள்ளதாக சூடான் குற்றம் சுமத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் அகில கால மீளாய்வு அமர்வுகளில் கலந்து கொண்டபோது சூடான் ஜனாதிபதி ஒமர் பஸிர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற ஆயுத முரண்பாடு வருந்தத்தக்கது எனவும் அதற்காக அனுதாபப்படுவதாகவும் ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான சூடான் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

சூடானில் இடம்பெற்ற ஆயுதப்போராட்டம் தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் சூடான் ஜனாதிபதி ஒமர் பஸிரை குற்றம் சுமத்தியிருந்தது.

எனினும் இலங்கை விவகாரம் தொடர்பில் மெத்தனப் போக்கை பின்பற்றி வருகின்றது.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை பக்கச்சார்பின்றி செயற்பட்டு வருகிறார்.

நவநீதம்பிள்ளை ஏன் இலங்கைக்கு விஜயம் செய்யவில்லை என பெலாரஸ் கேள்வி எழுப்பியுள்ளது. (அ-2)

# பறக்கும் தட்டானது தற்காலிக கொட்டகை

## உணவு சமைக்க வழியில்லை

(கொழும்பு)

கேப்பாபிலவு சீனியா மோட்டையில் அமைக்கப்பட்ட தற்காலிக கொட்டகைகளுக்குள் மழைநீர் புகுந்துள்ளதால் உணவு சமைக்க முடியாத நிலை தோன்றியுள்ளதாக அந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதுவரை எந்தவித உதவிகளும் கிடைக்கவில்லை என அவர்கள் கவலை கூறுகின்றனர்.

மெனிக்பாம் நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த சுமார் 178 குடும்பங்கள் கேப்பாபிலவு சீனியாமோட்டை பகுதியில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டிருந்தனர். தற்போது தொடர்ந்து பெய்துவரும் மழையாலும் காற்றாலும் தற்காலிக கொட்டகைகளின் தகரங்கள் தூக்கி வீசப்பட்டன. தூவானமும் மழை நீரும் கொட்டகைகளுக்குள் புகுந்துள்ளன.

இதனால் நாளாந்த சமையல் வேலைகளை செய்ய முடியாதுள்ளதாக மக்கள் தெரிவித்தனர். இதுவரை சமைத்த உணவுகளோ வேறு எந்தவித உதவிகளோ தமக்கு வழங்கப்படவில்லை என்று அவர்கள் மேலும் கூறுகின்றனர்.

இம் மக்களை பாதுகாக்க வற்றாப்பளை மகா வித்தியாலயத்தில் சென்று தங்குமாறு முல்லைத்தீவு அரச அதிபர் அறிவித்தல் விடுத்த போதும் தமது உடைமைகளுக்கு பாதுகாப்பு இல்லை என தெரிவித்து அவர்கள் அங்கு செல்ல மறுத்து வருகின்றனர்.

அந்தப் பகுதி கிராம சேவையாளரிடம் மக்கள் விடுத்த கோரிக்கைகளை அடுத்து 178 குடும்பங்களுக்கும் குக்கர் வழங்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# குற்றச்சாட்டுகளுக்கு எதிராக போராடுவேன்

## பிரதம நீதியரசர் உறுதி

(கொழும்பு)

குற்றச்சாட்டுகளுக்கு எதிராக சகல வழிகளிலும் போராடப் போவதாக பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிராக ஆளும் கட்சியினர் குற்றவியல் பிரேரணை ஒன்றை சமர்ப்பித்துள்ளனர். இந்த குற்றச்சாட்டுகளுக்கு எதிராக சகல வழிகளிலும் போராடப் போவதாக பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார் என டுவிட்டர் தகவல் வெளியிட்டது.

சட்டத்தரணிகளிடம் ஷிராணி பண்டாரநாயக்க இதனைக் குறிப்பிட்டுள்ளார். உலகின் பல நாடுகள் ஷிராணி பண்டார நாயக்கவிற்கு ஆதரவாக குரல் கொடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)



வலி.மேற்கு பிரதேச சபை உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு மருத்துவ முகாம் வருமான மதிப்பீடு தொடர்பான நடமாடும் சேவைகள் அண்மையில் சங்கானை வட்டுக்கோட்டை உபஅலுவலகத்தில் நடைபெற்றது. இந்நடமாடும் சேவையில் மருத்துவ பரிசோதனை, வருமான மதிப்பீடு ஆகியன நடைபெறுவதை படங்களில் காணலாம்.

# திருச்சியில் இருந்து இலங்கை பயணித்த விமானம் தரையிறக்கம்

திருச்சியிலிருந்து 110 பயணிகளுடன் இலங்கைக்கு பயணித்த விமானம் மீண்டும் திருச்சி விமான நிலையத்தை சென்றடைந்துள்ளது.

திருச்சியிலிருந்து புறப்பட்ட விமானத்தில் கழுகு மோதியதால் விமானத்தின் கண்ணாடி உடைந்துள்ளது. இதையடுத்து விமானம் திருச்சி விமான நிலையத்திலேயே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதில் இருந்த 80 பயணிகள் வேறு விமானம் மூலம் இலங்கைக்கு அனுப்பப்பட்டனர். பின்னர் சீர் செய்யப்பட்ட இலங்கை விமானம் நேற்று முன்தினம் இரவு பயணிகள் இன்றி இலங்கை வந்தடைந் தது. (2-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவாவில் இலங்கைக்கு கைகொடுக்குமா இந்தியா?

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்படும் பூகோளகால மீளாய்வில்- இலங்கையின் நிலை குறித்து நவம்பர் 1ஆம் திகதி விவாதம் தொடங்கியது. நவம்பர் முதலாம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை இவ்விவாதம் நடைபெற்றது.

இதில் இலங்கையிடம் கேள்விகளை எழுப்ப 99 நாடுகள் ஆயத்தமாகியுள்ளன. இதனால், ஒவ்வொரு நாட்டிற்கும் 72 செக்கன்கள் மட்டுமே உரையாற்றும் வாய்ப்பு அளிக்கப்படவுள்ளது. பல நாடுகள் ஏற்கனவே கேள்விகளை கையில் கொடுத்தும் விட்டன. இதனால், இந்தக் கூட்டத்தில் இலங்கைக்கு பலத்த சவால் காத்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

ஏனென்றால் பல்வேறு நாடுகளும் எழுப்பவுள்ள கேள்விகள் சிக்கலானவை. இதில் அமெரிக்காதான் அதிகளவிலான விவகாரங்கள் குறித்து கேள்விகளை எழுப்பியுள்ளது. வடக்கு மாகாண சபைத்தேர்வுள்ளது.

இந்த மீளாய்வை மேற்கொள்ளும் பொறுப்பில் இந்திய, பெனின், ஸ்பெயின் ஆகிய நாடுகள் இருக்கின்றன. இதில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்பதே முக்கியமான கேள்வியாகவுள்ளது.

கடந்த மார்ச்மாதம் ஐ.நாமனித உரிமைப்பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை ஆதரித்து இந்தியா அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தது. இந்தியாவின் முடிவு தமக்கு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது என்பதை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஏற்றுக்கொண்டுள்ளார்.

ஆனால் இப்போது, இந்தியா தமக்குப் பின்னால் உள்ளது என்றும் அவர் கூறியுள்ளது கவனிக்கத்தக்கது. ஃபுரன்ட் லைன் சஞ்சிகைக்கு அளித்த பேட்டியிலேயே பீரிஸ் அவ்வாறு கூறியுள்ளார்.

எனினும் அவரது இந்தப் பதில் ஜெனிவா மீளாய்வுக் கூட்டத்தை அடிப்படையாக வைத்து கேட்கப்பட்ட கேள்விக்கானது அல்ல என்பது இலங்கையின் அரச தலைவர்கள் அந்த நம்பிக்கையை வெளிப்படையாகவே கூறியிருந்தனர். அதனால்தான் பெருத்த ஏமாற்றத்தை அரசாங்கம் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

எனினும் கடந்த மார்ச் மாதத்துக்குப் பின்னர், இலங்கையின் நிலைமைகளில் பெரியதான மாற்றங்கள் ஏதும் ஏற்பட்டுவிடவில்லை. இத்தகைய நிலையில் இந்தியாவின் நிலை எவ்வாறு இருக்கும் என்பது கேள்விக்குரியதாகவே உள்ளது.

இப்போது மனித உரிமைகள் விவகாரங்களுக்கு அப்பால் இனப்பிரச்சினைக்கான அரசியல்தீர்வு, அதிகாரப்பகிர்வு பற்றிய சர்ச்சைகளும் வலுப்பெற்றுள்ளன. அரசியல் தீர்வுக்கான பேச்சுக்கள் முடங்கிப் போயுள்ளதும், 13-வது திருத்தத்தை ஒழிப்பதற்கான முயற்சிகளும்கூட ஜெனீவாவில் எதிரொலிப்பதற்கு வாய்ப்புகள் உள்ளன.

போர் முடிந்து மூன்றரை ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில், கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் வெறுங்கையைப் பிசைந்தபடி நிற்கிறது அரசாங்கம். இத்தகைய 22-வது கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை திருப்திகரமான அறிக்கையைக் கொடுகின்ற அளவுக்கு இலங்கை அரசாங்கம் பெரிதாக எதையும் செய்துவிடவில்லை. போர்க்குற்ற விசாரணைகள், பொறுப்புக்கூறல், அரசியல் தீர்வு என்று ஏகப்பட்ட விவகா ரங்களில் அரசாங்கம் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க எதையுமே செய்யவில்லை. இந்த நிலையில் ஜெனீவா கூட்டத் தொடரில் அழுத்தங்களில் இருந்து தப்பிக் கொள்வது ஒன்றும் அரசாங்கத்துக்கு சுலபமான காரியமாக இருக்காது.

பெரும்பாலான விடுதலைப் புலிகளுக்கு புனர்வாழ்வு கொடுத்து விடுவித்து விட்டோம்; இடம் பெயர்ந்த மக்கள் அனைவரையும் மீளக் குடியமர்த்தி விட்டோம்; நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடை முறைப் படுத்து வதற்கான செயற்றிட்டத்தை வெளியிட்டு விட்டோம் என்று அரசாங்கம் மூன்று விடயங்களை மட்டும் கையில் வைத்திருக்கின்றது.

ஆனால், இந்த மூன்றுமே ஓட்டை நிறைந்த படகுகள் என்பதுதான் முக்கியம். இந்த ஓட்டைப்படகுகளை நம்பித்தான், ஜெனீவா என்ற ஆற்றைக் கடக்க அரசாங்கம் முனைகிறது. இது ஆபத்தான பயணம் என்பது அரசுக்குத் தெரியாததல்ல. ஆனாலும் உதவிக்கு வரும் என்று இந்தியா மீது இன்னமும் அது நம்பிக்கை வைத்துள்ளது ஆச்சரியம் தான்.

இந்தியா இதுபோன்ற சமயங்களில் உதவினாலும்கூட தான் நிறை

தல் தாமதம், சாட்சிகள், பாதிக்கப்பட்டோரைப் பாதுகாக்கும் சட்டமூலம், சணல்-4 வெளியிட்ட போர்க்குற்ற வீடியோ, திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் படுகொலை, மூதூரில் அக்சன்பெய்ம் பணியாளர்கள் 17 பேரின்படுகொலை, லசந்த விக்கிரமதுங்க படுகொலை, பிரகீத் எக்னெலிகொட கடத்தல், ஊடகவியலாளர்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், அரசை விமர்சிப்போருக்கு எதிரான அச்சுறுத்தல்கள் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கான செயற்றிட்டத்தில் பரிந்துரைகள் அனைத்தும் உள்ளடக்கப்படாததற்கான காரணம் அவற்றின் நிலை என்று அமெரிக்கா எழுப்பும் கேள்விகளின் பட்டியல்மிகவும் நீளமானது.



## இலங்கையிடம் 99 நாடுகள் கேள்விகளை எழுப்பும்

அதேவேளை, போரின்போது சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைச் சட்டங்கள் மீறப்பட்டது தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு சுதந்திரமான விசாரணைகளின் மூலம் இலங்கை அரசாங்கம் எப்போது பொறுப்புக் கூறப்போகிறது என்று கனடா எழுப்பும் கேள்வியும் போர்க்குற்றச் சாட்டுகள் தொடர்பாக விசாரிக்க இலங்கை இராணுவம் நியமித்த விசாரணை நீதிமன்றத்தின் நிலை குறித்து பிரித்தானியா எழுப்பியுள்ள கேள்வியும் சிக்கலானவை.

இவைதவிர அரசியல்தீர்வு, அதிகாரப்பகிர்வு குறித்தும் இலங்கை அரசுபதிலளிக்க வேண்டியுள்ளது.

இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்க அமைச்சர் மகிந்த சமரசிங்க தலைமையிலான குழு ஜெனிவா சென்றுள்ளது.

இலங்கை தொடர்பான கேள்விகளுக்கு அரசாங்கம் கொடுக்கும் பதில்களின் அடிப்படையில் தயாரிக்கப்படும் அறிக்கைத் தீர்மானம் மீதான வாக்கெடுப்பு வரும் நவம்பர் 5ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கும் 6.00மணிக்கும் இடையில் இடம்பெற குறிப்பிடத்தக்கது. ஆனால், இப்போது இந்தியா எமக்குப் பின்னால்தான் நிக்கிறது என்ற அவரது பதில் ஜெனிவா மீளாய்வுக் கூட்டத்தை மனதில் கொண்டதாகவேபடுகிறது.

நவம்பர் 5ஆம்திகதி வாக்கெடுப்பில் இலங்கைக்கு சார்பாக இந்தியா நடந்துகொள்ளுமா என்ற கேள்விக்கு புதுடெல்லியிடம் இருந்து இதுவரை பதில் இல்லை.

கடந்த மார்ச் மாத ஜெனீவா கூட்டத் தொடரின் போது இந்தியா கடைசி வரை முடிவை வெளியிடாமல் எப்படி மௌனமாக இருந்ததோ அதுபோலவே இப்போதும் இருக்கிறது. அப்போதும் கூட இலங்கை அரசாங்கம் இந்தியா கைவிடாது என்று கடைசிவரை உறுதியாக நம்பிக்கொண்டிருந்தது. நிலையில் ஜெனீவா போர்க்களம் என்பது அரசாங்கத்துக்கு சிக்கலானதும் சிரமமானதுமாகவே இருக்கும்.

1 ஆம் திகதி நடந்துமுடிந்த விவாத அமர்விலும் 5 ஆம் திகதிய வாக்கெடுப்பிலும் இலங்கை அரசு சமாளித்துக் கொண்டு விட்டாலும் பிரச்சினை என்பது முடிந்துவிடப் போவதில்லை. அடுத்த ஆண்டு மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரம் மீண்டும் வரப்போகிறது.

கடந்த மார்ச் மாதம் 19 ஆவது அமர்வில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் தொடர்ச்சியாக- அந்தத் தீர்மானத்தின் கடப்பாடுகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றியுள்ளதா என்ற அறிக்கை வேற்ற வேண்டிய பொறுப்புகள், கடப்பாடுகளை மறந்து விட்டு, ஜெனீவாவில் இந்தியா கைகொடுக்கும் என்று இலங்கை அரசாங்கம் நம்பிக் கொண்டிருப்பது புத்திசாலித்தனமான காரியமாகத் தெரியவில்லை.

என்றாலும் அரசாங்கம் தனது பக்கத்தில் உள்ள தவறுகளைக் களைவதற்குப் பதில் அதே தவறைத் தான் மீண்டும் மீண்டும் செய்ய முனைகிறது. இதன் விளைவுகள் ஜெனீவாவில் எவ்வாறு எதிரொலிக்கும் என்பதை மிக விரைவாகவே அறிந்து கொள்ளலாம்.

கே.சஞ்சயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயக சோசலிசக் குடியரசில் ஜனநாயகம் எள்ளளவும் இல்லை

## மனோ கணேசன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையின் அதிகாரபூர்வ பெயர் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு என்பதாகும். பெயரில் இருக்கும் ஜனநாயகமும் சோசலிசமும் நாட்டுக்குள்ளே கிடையாது.

அதுதான் ஸ்ரீலங்கா சிங்கள பௌத்த குடியரசு என்பதாகும். முழுநாட்டையும் சிங்கள பௌத்தர்களின் நாடு என அறிவிக்கும் இலக்கை நோக்கி மஹிந்தவும் அவரது சகோதரர்களும் நாட்டை கொண்டு போகின்றார்கள் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அதிகாரத்தை பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம் என்ற தொனிப்பொருளில் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய இயக்கத்தின் அங்குரார்ப்பண ஊடகவியலாளர் மாநாடு கொழும்பு பார்ன்ஸ் பிளசில் நேற்றுக் காலை நடைபெற்றது.

இந்த மாநாட்டில் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

நாட்டில் ஜனநாயகத்திற்கும் சோசலிசத்திற்கும் பதிலாக சிங்களமும் பௌத் தமும் நடைமுறையில் தலைவிரித்தாடுவது எல்லோருக்கும் தெரியும். இந்த நடைமுறை மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் நீண்ட கால திட்டத்தை முன்கூட்டியே அறிவிக்கிறது.

இன்று நாட்டில் அதிகாரப்பிரிவினைக்கு எதிரான ஒரு திட்டமிட்ட இயக்கம் முன்னெடுக்கப்படுகிறது. விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க, தினேஷ் குணவர்த்தன ஆகிய அமைச்சர்கள் மற்றும் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் இதன் பின்னணியில் இருக்கின்றனர். இவர்கள் அரசின் அதிகாரமிக்க செல்லப்பிள்ளைகள். ஆனால், இதுபற்றி கேட்டால் அரசின் ஊடக பேச்சாளர் சிறுபிள்ளைத்தனமாக பதில் சொல்கிறார். நாட்டு மக்களை முட்டாள்களாக கருதி பதில் சொல்கிறார். இன்னமும் கூட பதின்மூன்று பிளஸ் என்று பேசுகிறார்கள். பதின்மூன்றை அகற்ற முடிவு செய்யவில்லை என்று சொல்கிறார்.

இந்த நாட்டு மக்களுக்கு தாய்நாடு இலங்கை. நம் எல்லோருக்கும் தந்தை நாடு இந்தியா. அங்கிருந்துதான் இங்கே எல்லாம் வந்தது. மொழி, கலை, கலாசாரம், சங்கீதம், மதம் எல்லாம் அங்கிருந்து வந்தவைதான்.

இன்றும்கூட அங்கிருந்து பெரும் முதலைகளின் முதலீடுகள் வருகின்றன. அவர்களுக்கு நம் நாட்டு நிலங்கள் கபடத்தனமாக வழங்கப்படுகின்றன. அங்கிருந்து எல்லாம் வேண்டும். ஆனால், இந்தியாவில் நடைமுறைஆகியுள்ள அதிகாரப்பிரிவினை முறைமை, மொழிவாரி மாநில முறைமை உங்களுக்கு வேண்டாம்.

இன்று தமிழர்கள் ஆயுதம் தூக்கப் போவதில்லை. தமிழர்கள் நாட்டை பிரிக்க போவதில்லை. வட.கிழக்கில் வாழ்கின்ற தமிழர்களின் பெரும்பான்மை ஆணையை பெற்றுள்ள தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் இதை தெளிவுபட கூறிவிட்டார். அதற்கு மேலதிகமாக சிங்க தேசியக் கொடியை அசைத்தும் காட்டிவிட்டார். இதையே நமது ஜனநாயக மக்கள் முன்னணியும் கூறுகின்றது.

இந்நாட்டில் பல தமிழ் கட்சிகள் இருந்தாலும் கூட்டமைப்பின் ஐந்து கட்சிகளும் நமது கட்சியையும் சேர்த்து இந்த ஆறு தமிழ் கட்சிகள்தான் இந்நாட்டில் வாழும் மிகப் பெரும்பான்மை தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் என்பதை மறவாதீர்கள்.

ஆகவே, இதுதான் ஒட்டுமொத்த தமிழர்களின் எண்ணக்கருத்து.

இவற்றினைச் சொல்லியும் நீங்கள் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் நியாயமான அதிகாரங்களை பிரித்து நாட்டை ஐக்கியப் படுத்தத்தயார் இல்லை. எங்களை ஒன்றுமில்லாமல் கடலிலா பாயச் சொல்கிறீர்கள்?

தேசியகீதம் பற்றி பிரச்சினை பேசப்பட்ட போது இந்தியாவில் இந்தி மொழியில்தான் தேசியகீதம் பாடப்படுகிறது என்று நாடாளுமன்றத்திலேயே சொன்ன அறிவுக்கொழுந்து தான் இந்த விமல் வீரவன்ச.

இந்தியாவில் சிறுபான்மை மொழியான வங்காளத்தில்தான் அந்நாட்டு தேசியகீதம் பாடப்படுகிறது என்பதுகூட தெரியாமல் இவர்கள் அமைச்சர்களாக இருக்கிறார்கள்.

புலிகளின் தோல்வியை தமிழ் மக்களின் தோல்வியாக மட்டும் இல்லாமல் முஸ்லிம் மக்களின் தோல்வியாகவும் மாற்றி முழு நாட்டையும் சிங்கள பௌத்த நாடாக மாற்ற நாம் விடமாட்டோம். சிங்கள மக்களின் மனசாட்சியை தட்டி நாம் பேசுவோம். எவருக்கும் பயந்து எமது இந்த அதிகாரத்தை பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம் என்ற இயக்கத்தை கைவிடமாட்டோம் என்றார். சுரேஷ் பிரேமச்சந்திரன், விக்கிரமபாகு கருணாரத்ன, சிறிதுங்க ஜெயசூரிய, அசாத் சாலி, சரத் மனமேந்திர, அருணா சொய்சா ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-2)

## 2013 இல் இரண்டரை இலட்சம் மக்கள் கனடாவுக்குள் அனுமதி

### அமை.ஜேசன் கென்னி தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 2013 ஆம் ஆண்டில் வழக்கம் போல் புலம்பெயர்ந்த மக்களுக்கு அனுமதி வழங்கப்படும் என கனடா அறிவித்துள்ளது.

இது குறித்து புலம்பெயர்வுத்துறை அமைச்சர் ஜேசன் கென்னி கூறுகையில், வழக்கம் போல் 2013 ஆம் ஆண்டு சுமார் இரண்டரை இலட்சம்பேர் கனடாவுக்கு வர அனுமதிக்கப் படுவர் என்று தெரிவித்துள்ளார்.

மேலும் பணிப்பாளர் திட்டத்தில் சேர்க்கப் படும் நபர்களின் எண்ணிக்கையை குறைத்தும் அனுபவப் பிரிவு திட்டத்தின் கீழ் அதிக எண்ணிக்கையில் மக்களை இணைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதுதவிர புலம்பெயர்ந்த மாணவர் மற்றும் பணியாளருக்கு நிரந்தர குடியிருப்பு வசதியை ஏற்பாடு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-9)

## இலங்கையில் நடப்பதை இன அழிப்பாகப் பாருங்கள்

### பா.ம.க.அறிக்கை



இலங்கை தமிழர்களின் நிலை குறித்து மதிப்பீட்டாய்வு ஐ.நா.மனித உரிமை ஆணையகத்தில் நடைபெற்று வருகிறது. இதில் பசுமைத்தாயகம் சார்பில் ஜி.கே.மணி, இர.அருள் ஆகியோர் பங்கேற்றுள்ளனர்.

இது குறித்து பா.ம.க. சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், ஒக்டோபர் 31 ஆம் திகதியன்று ஜெனீவாவில் நடைபெற்ற முன்னோட்ட விசாரணையில் ஜி.கே.மணி உட்பட உலகம் முழுவதிலும் இருந்து ஏராளமான மனித உரிமை அமைப்புகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ஜி.கே.மணி முன்வைத்த வாதங்களில் இலங்கையில் நடப்பதை உள்நாட்டுப் பிரச்சினையாக பார்க்காமல் இன அழிப்பாகத்தான் பார்க்க வேண்டும். இலங்கைப் போரில் பாதிக்கப்பட்ட தமிழர்கள் அனைவரையும் அவர்களின் சொந்த ஊர்களில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழீழம் குறித்து ஐ.நா.மூலம் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று கூறினார். தொடர்ந்து நேற்று நடைபெற்ற காலமுறை மதிப்பீட்டாய்விலும் ஜி.கே.மணியும் அருளும் பங்கேற்று வாதங்களை முன்வைத்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## வடக்கில் தகுந்த நேரத்தில் தேர்தல்கள் நடத்தப்படும்

உரிய நேரத்தில் வடக்கில் தேர்தல்கள் நடத்தப்படும் என இலங்கை அரசு அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் அகிலகால மீளாய்வு அமர்வுகளில் கலந்துகொண்ட மனித உரிமை அமைச்சர் மஹிந்த சமரசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

வடக்கு தேர்தல்கள் தொடர்பில் இந்தியா அகிலகால மீளாய்வு அமர்வுகளில் கேள்வி எழுப்பியிருந்தது.

சரியான காலத்தில் வடக்கில் மாகாண சபைத் தேர்தலை அரசாங்கம் நடத்தும் என மஹிந்த சமரசிங்க இந்திய பிரதிநிதிகளுக்கு பதிலளித்துள்ளார். (2-9)


BOC

## மீட்கப்படாத அடகு நகைகளின் பகிரங்க ஏல விற்பனை

யாழ்.மாவட்டத்தில் உள்ள பின்வரும் இலங்கை வங்கி கிளைகளில் 16.02.2012 ற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 16.08.2011 ற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

| கிளையின் பெயர் | ஏல விற்பனைத்திகதி இடம், நேரம் |
|---|---|
| யாழ்.மேற்தரக்கிளை (யாழ்.கச்சேரி, யாழ்.பஸ் நிலையம், யாழ்.பிரதான வீதி விரிவாக்கற்கிளைகள் உட்பட) | யாழ்ப்பாணம் அதி மேற்தரக்கிளை யாழ்ப்பாணம் 2012 நவம்பர் 17 ஆம், 18 ஆம் திகதிகளில் (சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை) காலை 9.30 மணிக்கு |
| யாழ்.2 ஆம் மேற்தரக்கிளை (கொக்குவில் விரிவாக்கற்கிளை உட்பட) | |
| திருநெல்வேலி | |
| காரைநகர் | |
| சுன்னாகம் | |
| மானிப்பாய் | |
| காங்கேசன்துறை (அளவெட்டி, இளவாலை விரிவாக்கற்கிளைகள் உட்பட) | |
| நெல்லியடி | |
| ஊர்காவற்றுறை (ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, நயினாதீவு விரிவாக்கற்கிளைகள் உட்பட) | |
| பருத்தித்துறை | |
| சாவகச்சேரி (கைதடி, கொடிகாமம், பளை, பூநகரி விரிவாக்கற்கிளைகள் உட்பட) | |
| அச்சுவேலி | |
| கோப்பாய் | |
| உரும்பிராய் | |
| சங்கானை | |
| வல்வெட்டித்துறை | |

இந்த ஏல விற்பனையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச்செய்யும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.

தொலைபேசி இல. 021 222 4683
021 222 3126

செயற்பாட்டு முகாமையாளர்,
இலங்கை வங்கி (வடபிராந்தியம்),
வடபிராந்திய காரியாலயம்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சு/1424)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல் பயன்தரும் மரங்களும் வேளாண் காடுகளும்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 24-II



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

மரங்களின் பெருமை பற்றி, வாழ்ந்து மகிழ்விக்கும் தன்மை பற்றி மனம்விட்டு பேச முனைந்திருக்கும் பகுதி இது. மனித மனதிலும் மேன்மையானது மரம் செய்யும் மறப்பதற்கல்லாத பயன்கள். மரத்தால் என்ன பலன் எனவும் ஒரு சில மனிதர் மறந்தும் மரத்தும் போலாகியிருக்கின்றனரே என காணமுடிகின்றது. இருந்தும் தந்தது பலன் அது இறந்தும் தந்தது பலன். இதிலே தான் எமக்கும் மரத்திற்கும் இடையில் நீண்ட இடைவேளை உண்டு. மனிதன் இருந்த போது தந்த பலன் இறந்த பின்பு இல்லையே. ஆறறிவு கொண்டும் ஆணவத்தை வைத்தும் ஆடி ஓடி அலைந்து கொண்டியங்கும் இவ்வாழ்க்கையில் நாம் எம்மோடிருந்த, எமக்காகவிருந்த பலற்றை இழந்து நிர்க்கதியாகியிருக்கின்றோம்.

இது எமக்கு இருந்தவற்றை நாமாக தொலைத்து நிற்கின்ற சோக நிலை அல்லவா? இன்னுமா புரியவில்லை. வாருங்கள் தொடர்ந்து பயணிப்போம், நாம் என்ன செய்திருக்கின்றோம் என்பதை ஓரிடத்திலிருந்தேனும் அசைபோட வேண்டாமா?

நாம் வாழும் பிரதேசம் வரண்ட வலயம். மாரியில் மழை பெய்ததோடு சரி. அதில் கிடைத்த நீரை வைத்து தான் தொடர்ந்து ஒரு வருட தேவையை பூர்த்தி செய்ய வேண்டிய நிர்ப்பந்தம். கோடையில் பெய்யும் மழை தவறி மேலாக பூமியை நனைத்துவிட்டு போவது போலாகியிருக்கிறது. இந்த இறுக்கத்தில் மரங்களின் பயன்களை நாம் அறிந்து அந்த வளத்தை தொடர்ந்து மேம்படுத்த முனைவோம்.

காலநிலை மாற்றம் இன்னும் எங்களுக்கு தலையிடியை கொடுக்க போகின்றது. இது உலகளாவிய மாற்றம். எனினும் இதற்குள் நாமும் எமது விவசாயமும் தவிர்க்க முடியாத அளவிற்கு சிக்குண்டுள்ளோம் அல்லவா? இந்த இயற்கையின் விதியை நாம் நினைத்த மாத்திரத்தில் மீறி விட முடியாது.மாறாக அதனை அனுசரித்து மேலும் இயற்கையின் சீற்றத்தை எதிக்கொண்டு எமது வாழ்க்கையை வேளாண் செய்கையை சீர்செய்துகொள்வதே சாலச் சிறந்தது.இயற்கையின் சீற்றத்தைப் பற்றி இக் கட்டுரைத் தொடரில் முன்னர் குறிப்பிட்டிருந்ததை அனுமானித்திருந்ததை மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

2012 ஆம் ஆண்டு பெய்த மழையின் பரம்பலை அவதானித்தால் முதல் ஒன்பது மாதங்களும் மழைவீழ்ச்சி குறைந்து இம்முறை பல நீரேந்து பகுதிகளில் வரட்சி ஏற்பட்டதை நாமறிவோம்.அதிலும் செப்டெம்பர் மாதத்தில் பெய்யாத பருவ மழை காலந் தாழ்த்தி ஒக்டோபர் மாதத்தில் பெய்யத் தொடங்கி இப்போது தாழமுக்கத்தின் பிரதிபலிப்பாக தொடர்ந்து கொண்டிருக்கின்றது. தொடர்ச்சியாக பெய்யத் தொடங்கிய மழை குறுகிய காலத்தினுள் பெய்யும் போது அது வெள்ளப் பெருக்காகி அழிவை ஏற்படுத்தி விடும் அபாயமும் உண்டு. பல நாடுகளில் சூறாவளியுடனிணைந்த மழையாகியிருப்பதையும் அறியமுடிகின்றது.இந்த நெருக்கடி நிலை மாறிமாறி வருடாவருடம் தொடரவிருக்கின்றதையும் ஊகித்துக் கொள்ளலாம்.

இனிவரும் இயற்கையின் சீற்றத்தை கருத்தில் கொண்டு பயிர்ச்செய்கையையும் மரம் நடுதலையும் கவனமாக மேற்கொள்ள வேண்டும். மரங்களை நடுவதற்கான ஊக்குவிப்பு முனைப்பாக முன்னெடுக்கப்பட்டிருக்கையில் அவற்றை நடுகை செய்யும் போது திட்டமிட்டு நடுகை செய்வதும் அவசியம். மேலும் மரங்களை நடவு செய்தால் மட்டும் போதாது. அவற்றை தேவைக்கேற்ப கத்தரித்து நிலத்தின் மேற்பகுதியை சீர்செய்து பேணிப்பாதுகாக்கலாம்.

நிஷா புயல் எமது பிரதேசத்தில் ஏற்படுத்திய பாரதூரமான அழிவுகளுள் பல வாழ்ந்து காட்டிய மரங்களை இழந்தது முக்கியமானது.யாழ் குடாநாட்டையே துவம்சம் செய்தது போல உயர்ந்து வளர்ந்த மரங்களெல்லாம் அவற்றினது நிலமேற்பகுதியினதுவிசாலமான வளர்ச்சியினாலும் ஆழ வேர்விடாது இன்னும் வேர்ப் பகுதியில் ஏற்பட்ட பாதிப்பினாலும் சரிந்து வீழ்ந்ததை நினைவிலிருத்திக் கொள்ள வேண்டும்.

பாதையோரங்களில், அலுவலகங்களில் இன்னும் வீடுகளில் மரங்களை நடுகை செய்யும் போது நாம் அவதானிக்க வேண்டிய விடயங்கள் உண்டு. இவ்வாறான இடங்களில் பல்பயன்தரும் மரங்களை தெரிவு செய்து நடுவது மிகவும் சிறந்தது.

மேலும் மரங்களை நடுகை செய்யும் போது குழியை ஆழமாக வெட்டி ஆழமான வேர்த்தொகுதியை உருவாக்க வழி செய்து கொடுத்தல் அவசியமாகும். மரங்கள் உயர்ந்து வளரும் போது அதனது கிளைகளை தெரிவு செய்து கத்தரித்து (Trimming) நிலமேல் பகுதியின் கனத்தை குறைத்துக் கொள்வதன் மூலம் மழைகாலத்திலும் குறிப்பாக வெள்ளைப் பெருக்கு ஏற்படும் காலத்திலும் மழை பாரம் கூடி சரிந்து விழாமல் தடுத்துக் கொள்ளலாம்.

ஒரு மரத்தையேனும் தேவையற்று இழக்கக்கூடாது. மரம் நடுவதில் எவ்வளவு சிரமமும் அவதியும் படும் நாங்கள் மரத்தை வெட்டி வீழ்த்துவதில் அதனை கவனிப்பதில்லை. தெரிந்து திட்டமிட்ட முறையில் மரங்களை நடவு செய்யும் போது அவற்றை மேலும் பேணிப் பாதுகாத்துக் கொள்வதும் சுலபமாகி விடும். இன்னும் தொழில்நுட்ப வளர்ச்சிக் கூடிய இக்காலத்தில் உயர்ந்து செல்லும் கிரேன் இயந்திரங்களின் உதவியுடன் உயரமான, அகல விரிந்துள்ள மரங்களின் குறிப்பிட்ட பகுதியை இலகுவாக கத்தரித்துக் கொள்ளலாம்.

வெளிநாடுகளில் வன இலாகா இவ்வாறான செயன்முறைகளை நகர அபிவிருத்திதுறை மற்றும் சாலை பாதுகாப்பு பிரிவு ஆகியவற்றுடனிணைந்து மேற்கொள்கின்றது. இதுபோன்ற விடயங்களில் நாமும் கவனத்தை செலுத்தி இருக்கின்ற மரங்களை பாதுகாக்கின்ற அதேவேளையில் நடுகை செய்யவிருக்கின்ற மரங்களையும் இதுபோல பயிற்றுவித்து நிலையாக எந்த இயற்கையின் சீற்றத்தையும் சமாளித்து வளரக்கூடியதாக வளர்க்க வேண்டும். வேர்த்தொகுதி ஆழமானதாக, பிடிப்புள்ளதாக இருப்பதை உறுதி செய்து கொள்வது மரங்களின் சீரான வளர்ச்சிக்கும் நீண்ட நாள் மேலான விருத்திக்கும் வழிசெய்யும்.

மர நாட்டுதலுக்காக மகோகனி, மலைவேம்பு, மா, வேம்பு, புளி, விளாத்தி, தேக்கு, மருது, இலவு, பனை, தென்னை, கமுகு, இலுப்பை, ஆல், அரசு, தேத்தா பலா இன்னும் பல பயன் தரும் மரங்களை நடவு செய்யலாம்.

பாதையோரங்களில் பாதையின் விளிம்பிலிருந்து 1 1/2 மீற்றர் வெளிப்பக்கமாக மா, விளாத்தி, புளி, இலவு, சவுக்கு ஆகிய மரங்களை தெரிவு செய்து நடலாம். இதனை (Avenue Planting) சாலையோர மரம் நடுகை என்பர். சாலையோரம் உள்ள மண் வளத்திற்கு ஏற்ப மரங்களை நடுவதற்கு தெரிவு செய்ய வேண்டும்.

# நீதியரசர் மீதான குற்றவியல் பிரேரணை நீதிமன்ற கட்டமைப்புக்கு விழுந்த பேரிடி

## முன்னாள் நீதியரசர் தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்கவிற்கு எதிராக ஆளும் கட்சியினர் அரசியல் குற்றவியல் பிரேரணை சமர்ப்பித்துள்ளமை நீதிமன்றக் கட்டமைப்பிற்கு விழுந்த அடியாகக் கருதப்பட வேண்டுமென முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 14 ஆம் அகிலகால மீளாய்வு அமர்வுகளில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதம நீதியரசருக்கு எதிராக அரசியல் குற்றவியல் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டமை ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை ஒட்டு மொத்த நீதிமன்றக் கட்டமைப்பிற்கு பிழையான செய்தியை எடுத்துச் சென்றுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகளினால் நீதமன்றின் சுயாதீனத் தன்மைக்கு பெரும் பாதிப்பு ஏற்படும்.

அரசியல் சாசன அடிப்படையிலேயே பிரதம நீதியரசருக்கு எதிராக அரசியல் குற்றவியல் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றார்.

இலங்கையின் அரசியல் சாசனத்தின் அடிப்படையாகவே பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிராக அரசியல் குற்றவியல் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். அரசியல் சாசனத்தின் அடிப்படை நியதிகளுக்கு அமையவே நடவடிக்கைகள் எடுக்கப்படும். அரசியல் சாசனத்திற்கோ அல்லது சட்டங்களுக்கு எதிராகவோ எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது என்றார்.

(அ-2)

# பிரதம நீதியரசரை பழிவாங்க அரசாங்கம் முயற்சிக்கின்றது

## சரத் பொன்சேகா குற்றச்சாட்டு

(கொழும்பு)

பிரதம நீதியரசரை அரசாங்கம் பழிவாங்க முயற்சிப்பதாக முன்னாள் இராணுவத் தளபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகா குற்றம் சுமத்தியுள்ளார்.

புறக்கோட்டை சொலிஸ் அரங்கில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்கவிற்கு எதிரான குற்றவியல் பிரேரணை முயற்சிக்கு எதிராக சட்டத்தரணிகள் போராட வேண்டும்.

அரசாங்கம் தொடர்ச்சியாக நீதிமன்றத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றது. எனினும் அவை மக்கள் மத்தியில் பிரபல்யம் அடையவில்லை.

நீதித்துறையைச் சேர்ந்தவர்கள் அழுத்தம் பற்றி அறிந்திருந்தாலும் அதற்கு எதிராக எவரும் குரல் கொடுக்கவில்லை.

உலக நாடுகளுடன் மற்றும் பிராந்திய வலய நாடுகளுடன் ஒப்பீடு செய்யும் போது இலங்கையில் நீதிமன்றத் துறையின் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன.

நீதிச் சேவை ஆணையாளர் மஞ்சுள திலகரட்ண மீது தாக்குதல் நடத்தியவர்கள் இன்னும் கைது செய்யப்படவில்லை. தற்போது பிரதம நீதியரசரை பழிவாங்கும் படலம் ஆரம்பமாகியுள்ளது. அமைச்சர்கள் கோழைத்தனமான அறிக்கைகளை வெளியிட்டு நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரை அவமரியாதை செய்கின்றனர் என சரத் பொன்சேகா குற்றம் சுமத்தியுள்ளார்.

(2-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஸ்ரீ அம்மா பகவானின் சம்பூர்ண ஜீவன் முக்தி

உலகம் தன்னைத்தானே அழித்துக் கொள்வதிலிருந்து காப்பாற்றப்பட வேண்டுமெனில் மனித இனம் ஓர் உயரிய சைதன்ய. நிலையை அடைய வேண்டும். இதுவே இன்றைய மிக முக்கியமான தேவையாக உள்ளது. முழு மனித சமூகமே லௌகீக வாழ்க்கையிலிருக்கும் போதே முக்தியடைய வேண்டும்.

முக்தி என்பது போராட்டமில்லாத, துன்பமில்லாத வாழ்வாகும். சரீர துக்கம், மனரீதியான துக்கம், ஆன்மீக துக்கம் ஆகிய . மூன்று வகையான துக்கத்திலிருந்தும் சம்பூர்ணமான பூச்சிய நிலையை அடைவதே முக்தி என பகவான் கூறியுள்ளார்.

எமது வாழ்வில் ஏற்படுகின்ற பிரச்சினைகள், துயரங்கள் அனைத்திற்கும் நாமே காரணம். வேறு எவரும் காரணமல்ல. எமது எண்ணங்கள், ஆசைகள், அபிப்பிராயங்கள், செயல்களிலிருந்தே பிரச்சினைகள், துன்பங்கள் உருவாகின்றன. எமது மனமே இதற்கு உரித்தாக உள்ளது. மனதின் பிடியில் இருந்து முழுமையாக விடுவித்து நான் என்ற நிலையைப் போக்கி நிரந்தரமான ஆனந்த நிலையை அளிப்பதே ஸ்ரீ அம்மா பகவானின் அவதார சங்கற்பமாகும்.

நாம் ஏன் முக்தி அடைய வேண்டும் என எண்ணலாம். இதனைப் பற்றி சிறிது ஆழ்ந்து சிந்திப்போமாயின்! எமக்கு ஏற்படுகின்ற கஷ்டங்கள், துன்பங்களை ஏற்றுக் கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றோம். இதனால் சலிப்பு,



கோபம், பொறுமையின்மை, நிம்மதியற்று குறிக்கோள் இல்லாத வாழ்க்கையில் மூழ்கித் தவிக்கும் நிலை உருவாகின்றது. இந்நிலையிலிருந்து விடுபட மனிதனால் முடியாது என்பது திண்ணம். இறையருள் மூலமே இந்நிலை மாறலாம், மாற்றப்படலாம்.

இறையருள் கிடைப்பதற்கு திறவுகோலாக அமைவது இதயமலர்ச்சியே! பக்தி, பிரார்த்தனை, சேவை மூலம் புண்ணியம் மேலிட்டு நன்றியுணர்வுடன் செயற்படும் பொழுது இதய மலர்ச்சி ஏற்படுகின்றது. நாம் எதைச் செய்கிறோமோ அதன் பன் மடங்கினை பெறுகின்றோம்.

இதுதான் நாம் அனுபவிக்கும் துன்பம். இப்பூமித்தாய் அனுபவிக்கப்போகும் அழிவுகளை யாராலும் தாங்க முடியாது. இப்பிரபஞ்சமே அடுத்த உயர் நிலைக்குச் செல்ல வேண்டிய காலம் தொடங்கிவிட்டது.

அதற்கிணங்கவே ஸ்ரீ கல்கி பகவானும் ஸ்ரீ பத்மாவதி அம் மாவும் உலக மக்களுக்கு சம்பூர்ண ஜீவன் முக்தியளித்து சுவர்ண யுகத்திற்கு அழைத் துச் செல்லும் கனவோடு அவதாரம் செய்து, இந்தியாவில் ஆந்திரப் பிரதேசத்திலுள்ள வரதயபாளையம் என்னுமிடத்தில் தெய்வீக அலைகள் சங்கமிக்கும் மண்டபத்தை நிர்மாணித்து Golden City அவதார நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றனர்.

இப்புவியிலுள்ள ஒவ்வொரு மனிதனும் ஜீவன்முக்தி பெறும் வண்ணம், ஜீவன்முக்தி பெற்ற பல்லாயிரம் மக்கள்மூலம் ஸ்ரீ ஸ்ரீ பகவான் ஜீவன் முக்தியை பிரஷாதித்துக் கொண்டிருக்கின்றார். இந்நிலை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே காணப்படுகின்றது.

கடந்த ஆகஸ்ட் 18 ஆம் திகதி நிகழ்ந்த ஜீவன் முக்தி தரிசனத்தில் கலந்து கொண்ட இலங்கை மக்களில் 137 பக்தர்கள் ஜீவன் முக்தி அடைந்துள்ளதாக தெரிய வந்துள்ளது. இன்னும் பலர் முக்தி நிலை அடைந்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

அனுபவமே நம்பிக்கை தரும் வாருங்கள்! பேரருள் என்னும் சாகரத்தில் நீந்துங்கள். மனிதனுக்கு ஜீவன்முக்தி அளிக்கப்பட வேண்டும். ஜீவன்முக்தராக வாழ ஒவ்வொருவரும் திடசங்கற்பம் பூண்டு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இளங்கலைஞர் மண்டப கலா மண்டபத்தில் நிகழவிருக்கும் முக்தி தீட்சை பெருவிழாவில் கலந்து ஸ்ரீ பகவானின் அருள் பெறுங்கள்.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 28 ஆம் திகதி இலங்கை மக்களுக்கான ஜீவன்முக்தி தரிசனம் அளிக்க பகவான் அழைக்கின்றார். இந் நிகழ்விலும் கலந்து தரிசனம் பெற அனைவரும் விழித்தெழுவோம்!

**ஸ்ரீ அம்மா பகவான்**
**சற்சங்க ஒன்றியம்**
**யாழ்ப்பாணம்**

# வடதாரகையை கடற்படையிடமிருந்து மீளப்பெற விசேட கூட்டத்தில் தீர்மானம்

## அமைச்சர் டக்ளஸ் உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

வட தாரகையினை கடற்படையினரிடமிருந்து மீட்க யாழ்.மாவட்ட விசேட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் வடதாரகை படகு தற்போது நெடுந்தீவு மக்கள் பயணம் செய்வதற்காக பயன்படுத்தப்படுகின்றதா? தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகள் பிரயாணம் செய்வதற்கு பயன்படுத்தப்படுகிறதா? எனக் கேள்வி எழுப்பியிருந்தார்.

யாழ்.மாவட்டத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் கூட்டத்தில் ஆராயப்பட்டுக் கொண்டிருந்த போதே மேற்படி கேள்விகளை நாடாளுமன்ற உறுப்பினர் எழுப்பியிருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் கேள்விக்கு பதிலளித்த ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தினால் வடதாரகை படகுச் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது. குமுதினிப் படகுதான் ஓடுகிறது என பதிலளித்தார்.

இதற்கு பின்னும் அண்மையில் நான் நெடுந்தீவுக்கு சென்ற போது வடதாரகை படகு தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்றது. அப்பகுதி பொதுமக்களும் என்னிடம் முறையிட்டனர். அதுதான் கேட்டேன். ஆனால் நீங்கள் கூறுகின்றீர்கள் காலநிலை மாற்றத்தால் நாங்கள்தான் படகுச் சேவையை நிறுத்தியதாக என்றார்.

இதனிடையே வேலணை பிரதேச சபையின் தவிசாளர் புதிதாக கட்டப்பட்ட நெடுந்தீவு இறங்குதுறை இடிந்து விழும் நிலையிலுள்ளது என்றார்.

இதற்கு பதிலளித்த வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் சுதாகரன், குறித்த இறங்குதுறையின் ஓரமாக போடப்பட்ட கற்கள்தான் அகற்றப்பட்டுள்ளன. அதனால் இறங்கு துறைக்கு எந்தவிதப் பாதிப்பும் இல்லை எனப் பதிலளித்தார். அத்தோடு குறித்த இறங்குதுறை வரைக்கும் வடதாரகையை கொண்டு சென்று பயணிகளை இறக்கி விடமுடியாது என கடற்படையினர் கூறுகின்றனர்.

ஆனால் இறங்கு துறையின் திட்டப் பணிப்பாளர் கூறுகின்றார், கொண்டு செல்ல முடியும் என்று எதை நம்புவது என தெரியவில்லை என்றார் சுதாகரன். இதன்போது குறுக்கிட்ட அமைச்சர் டக்ளஸ், வடதாரகை படகு சுற்றுலாப் பயணிகளுக்காக கொண்டு வரப்படவில்லை எனக் கூறியதோடு கடற்படை ஏன் இறங்குதுறை வரைக்கும் படகைக் கொண்டு செல்ல முடியாது என்கிறது எனக் கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர் கடலின் ஆழம் காணாது என்கின்றனர் என்றார்.

இதனிடையே நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், நான் அண்மையில் நெடுந்தீவுக்கு சென்றபோது கண்ணால் கண்டதையும் காதால் கேட்டதையும் கூறினேன். நான் வேண்டுமானால் ஆதாரத்தை தருகின்றேன் என்றார்.

இதன்போது கண்ணால் காண்பதும் பொய் காதால் கேட்பதும் பொய் தீர விசாரிப்பதே மெய் என்றார் அமைச்சர்.

இதனை பொறுத்துக் கொள்ள முடியாத நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் நெடுந்தீவு போக்குவரத்து நீண்ட காலப்பிரச்சினை. மக்களுக்கு வடதாரகை பயன்படுத்தப்படவில்லை என மீண்டும் குற்றம் சாட்டினார்.

உடனே வடதாரகை படகு வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குத்தானே சொந்தமானது. ஏன் இன்னும் கடற்படை ஒப்படைக்கவில்லை என பிரதம பொறியியலாளரிடம் அமைச்சர் டக்ளஸ் கேள்வி எழுப்பினார்.

இதன்போது தொழில்நுட்ப இயந்திர வசதிகள் எம்மிடம் இல்லாததனால் கடற்படையினரிடம் வடதாரகையினை ஒப்படைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றார் பொறியியலாளர் சுதாகரன்.

பொறியியலாளரின் பதிலையடுத்து வடதாரகையினை கடற்படையினர் சேவையில் ஈடுபடுத்துவதனால்தான் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன என தெரிவித்த அமைச்சர் கடற்படையினரிடமிருந்து வடதாரகையினை மீளவும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதிபடத் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, அப்பாத்துரை விநாயகமூர்த்தி, ஈ.சரவணபவன், சில்வேஸ்திரி அலென்ரின், சிறிதரன், சந்திரகுமார் உள்ளிட்டவர்கள் பங்கு கொண்டிருந்ததோடு திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

(அ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயல்வெளிகளில் மீள்குடியமர்த்தி மக்களுடன் விளையாடுகிறது அரசு

## வெள்ளத்தில் தத்தளிக்கும் முறிகண்டி கிழக்கு மக்கள்– சிறிதரன் எம்.பி

(திருமுறிகண்டி)

திருமுறிகண்டி கிழக்கு பகுதி அரை ஏக்கர் திட்டத்தில் மக்கள் சதுப்பு நிலங்களில் மந்தைகள் போல வாழவேண்டிய அவலநிலையில் உள்ளனர்.

திருமுறிகண்டியில் இறுதியாக கடந்த மேமாதம் 23 ஆம் திகதி குடியேற்றப்பட்ட இக்கிழக்கு பகுதி அரை ஏக்கர் திட்ட மக்கள் எவ்வித அடிப்படை வசதிகளும் இன்றி அநாதரவாக விடப்பட்டுள்ளனர்.

இவ்வாறு குடியேற்றப்பட்ட மக்கள் தமது சொந்த காணியில் குடியேற்றப்படாமல் வயல் நிலங்களிலும் சதுப்பு நிலங்களிலும் குடியேற்றப்பட்டுள்ளனர்.

குறித்த குடியேற்றத்தில் 60 வரையிலான குடும்பங்கள் உள்ளதோடு அதில் 40 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தற்போது கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

இம்மக்களுக்காக அதாவது 60 குடும்பங்களுமாக இராணுவத்தினால் அமைக்கப்பட்ட 30-40 வரையான மலசலகூடங்களில் 90 வீதத்திற்கும் மேற்பட்ட மலசலகூடங்கள் உடைந்து சுகாதார சீர்கேடுடன் காணப்படுகிறது.

தற்போது மழைக்காலம் ஆரம்பித்துள்ளதனாலும் இராணுவம் குறித்த வயல் நிலத்தின் வெள்ள நீரினை மக்கள் குடியேற்றம் நோக்கி திருப்பிவிட்டுள்ளதனாலும் உடையவுள்ள மலசலகூட மலக்கழிவுகள் மக்கள் குடியேற்றங்களை நோக்கி பரவுகின்றன.

எமது வாழ்வில் அவலம் தொடர்பில் அரச அதிகாரிளுக்கு பலமுறை தெரிவித்த போதும் அவர்கள் அரசாங்கத்தின் பக்கம் நின்று எம்மை வேண்டாதவர்கள் போல் பார்க்கின்றனர். தவிர எமது அவலம் தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கொடூர போரின் போது சொந்த உறவுகளை இழந்து சொல்லொணா துன்பங்களை அனுபவித்துவந்த எமக்கு தற்போது எமது வாழ்வில் துன்பங்களே மிஞ்சியுள்ளன.

இம்மக்களினை நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவிக்கையில்,

குறித்த பகுதி மக்களினை தமது சொந்த நிலங்களில் குடியேற்றாமல் வலுக்கட்டாயமாக வயல் நிலங்களிலும் சதுப்பு நிலங்களிலும் இராணுத்தினர் குடியேற்றியுள்ளனர். திருமுறிகண்டிக்கு முன் இராணுவம் மக்களுடைய 5 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பை பிடித்து வைத்துள்ளதால் அம்மக்களை தமது சொந்த நிலங்களில் குடியேற்றாமல் இவ்வாறு சதுப்பு நிலங்களில் தவிக்கவிட்டுள்ளது.

தற்காலிக கொட்டகைகளில் வசிக்கவிடப்பட்டிருக்கும் இம்மக்கள் தற்போது கொட்டும் மழையின் மத்தியில் கைக்குழந்தைகளையும் பாடசாலை மாணவர்களையும் எவ்வாறு நோயிலிருந்து பாதுகாப்பது என்று திண்டாடுகின்றனர்.

இதற்கு அரச அதிகாரிகளும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்காமல் வேடிக்கை பார்க்கின்றனர்.

யுத்தத்தின் போது அகதிகளாக்கப்பட்ட மக்களினை மீண்டும் அகதிகளாக்கும் நடவடிக்கையே இம்மக்களினை மீண்டும் இடம்பெயரச் செய்து அந்நிலங்களினையும் கையகப்படுத்தும் முயற்சி இதுவாகும்.

இம்மக்களின் இந்த நிலைக்கு இராணுவமும் அரசுமே பொறுப்புக் கூறவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)

## துணுக்காய் வலயத்தில் கண்சிகிச்சை முகாம்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் பார்வைக் குறைபாடுடைய மாணவர்கள் என தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான கண்சிகிச்சை முகாம் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல். மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு மு/மல்லாவி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ள இச்சிகிச்சை முகாமில் துணுக்காய், மாந்தை கிழக்கு கோட்டத்திற்குட்பட்ட அனைத்து பாடசாலை மாணவர்களும் மு/மாங்குளம் மகா வித்தியாலயம், மு/திருமுறிகண்டி இந்து வித்தியாசாலை மாணவர்களும் பங்குகொள்ள முடியும். மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு முல்லை/ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள சிகிச்சை முகாமில் ஒட்டுசுட்டான் கோட்டத்திற்குட்பட்ட அனைத்து மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-9-15)

## பேருந்தில் பயணித்த பெண்ணின் தங்கச்சங்கிலி அபகரிப்பு

## வசமாக மாட்டினர் இரு பெண்கள்

(கரவெட்டி)

யாழ்ப்பாணம் -பருத்தித்துறைப் பேருந்தில் குடும்பப் பெண்ணின் தங்கச்சங்கிலியைக் களவாடிய வவுனியாவைச் சேர்ந்த இரு பெண்களை நெல்லியடி பொலிஸார் கைது செய்தனர்.

இச்சம்பவம் நேற்று நண்பகல் 12 மணிக்கு நெல்லியடி உப மின்சாரசபை அலுவலகத்திற்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, யாழ்ப்பாணத்திலிருந்து பேருந்தில் பருத்தித்துறை நோக்கி பயணித்த வேளை குறித்த பெண்ணின் அருகில் மேற்படி இருதிருட்டுப் பெண்களும் அமர்ந்து பயணம் செய்தனர்.

அச்சமயம் குறித்த பெண்ணின் கைப்பையிலிருந்த தங்கச்சங்கிலியை அபகரித்துக்கொண்டு நெல்லியடி உப மின்சார சபை அலுவலகத்திற்கு முன்பாக இறங்கியுள்ளனர். சங்கிலியை களவு கொடுத்த மேற்படி பெண் மந்திகையில் தனது கைப்பையை பார்த்த சமயமே சங்கிலி களவாடப்பட்டமை தெரியவந்தது.

பின்னர் ஆட்டோ ஒன்றின் உதவியுடன் சங்கிலியை களவாடி சென்ற இரு பெண்களும் பேருந்தில் இருந்து இறங்கிய இடத் தில் வேறு ஒரு பேருந்துக்காக காத்திருந்த வேளை குறித்த பெண் அவர்களிருவரையும் சோதனையிட்ட போதே களவாடிய தங்கச் சங்கிலியை மீட்டெடுத்தார்.

இச்சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் குறித்த இரு பெண்களையும் கைது செய்ய முற்பட்ட வேளை இருவரும் தப்பிச் சென்றுள்ளனர்.

இவர்களைச் துரத்தி சென்ற சிறு குற்றத்தடுப்பு பொலிஸ் உத்தியோகத்தர்களான ர.புஸ்பகாந்தன், பியந்த ஆகியோரே முடக்காடுப் பகுதியில் வைத்து மேற்படி இருவரையும் கைது செய்துள்ளனர். (அ-9-24)

## வவு.தமிழ்ச் சங்கத்தின் திருமூலர் விழா

(பூந்தோட்டம்)

வவுனியா தமிழ்ச் சங்கம் நடத்தும் திருமூலர் விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வைரவ புளியங்குளம் ஆதிவிநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் தமிழருவி த.சிவகுமரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் சப்ரகமுவ பல்கலைக்கழக மொழித்துறை முதுநிலை விரிவுரையாளர் வாசீக கலாநிதி முனைவர் கனகசபாபதி நாகேஸ்வரன் தலைமையில் மந்திரத்தின் பெருமையை மாநிலம் அறியட்டும் என்ற கருத்துக் களத்தில் திருமந்திரத்தின் வைப்புமுறை என்ற தலைப்பில் பொ.சத்தியநாதனும் திருமரத்தில் வாழ்வியல் என்ற தலைப்பில் தமிழருவி த.சிவகுமாரனும் திருமந்திரத்தில் ஆன்மீகம் என்ற தலைப்பில் க.ஐயம்பிள்ளையும் கருத்துரையாற்றுவர். (அ-9-266)

## கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சிங்கள, தமிழ் மாணவர்கள் மோதல்

கிழக்குப் பல்கலைக்கழகம் திருகோணமலை வளாகத்தில் கல்வி பயிலும் இரண்டாம் மற்றும் மூன்றாம் வருட சித்த மருத்துவ தமிழ் மாணவர்கள் மீது பெரும்பான்மையாகவுள்ள சிங்கள மாணவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கிழக்கு பல்கலைக்கழக திருகோணமலை வளாகத்தில் 25 தமிழ் மாணவர்கள் மீது 240இக்கு மேற்பட்ட சிங்கள மாணவர்கள் தொடர்ந்து தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக பல்கலைக்கழக வளாக நிர்வாகத்தினர் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்க முன்வரவில்லை எனப் பாதிக்கப்பட்ட மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 27 ஆம் திகதி இரு தமிழ் மாணவர்கள் தாக்குதலுக்கு உள்ளான நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று திரும்பினர்.

மீண்டும் கடந்த 31 ஆம் திகதி காலை வேறு சில மாணவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள் ளது.

இவர்களை விடுதியிலிருந்து பல்கலை வளாகத்திற்கு செல்வதற்கென பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட பேருந்து சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வழமை போல் சென்ற போது பேருந்தில் ஒட்டப்பட்டிருந்த புத்தர் உருவப்படம் ஒன்று கிழிந்து காணப்பட்டது. இதனை தமிழ் மாணவர்கள்தான் கிழித்துள்ளனர் எனத் தெரிவித்து பேருந்து வளாகத்தை சென்றடைந்ததும் தமிழ் மாணவர்கள் மீது சிங்கள மாணவர்கள் தாக்குதல் மேற்கொண்டதாக தெரியவருகின்றது.

பேருந்தில் ஏற்பட்ட சம்பவத்திற்கு சாரதியும் அதன் நடத்துநருமே பொறுப்புக் கூறவேண்டியவர்கள் இருக்க அவர்களிடம் எவ்வித விசாரணைகளும் மேற்கொள்ளப்படாமல் தமிழ் மாணவர்கள் இதனை செய்துள்ளனர் எனக் கூறியே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் தாக்குதலை அடுத்து மாணவர்கள் எவரும் விடுதிக்கு செல்லவில்லை.

இந்த வளாகத்தில் சித்த மருத்துவம், தொடர்பாடல் மற்றும் முகாமைத்துவம் ஆகிய துறைகள் செயற்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தங்க பிஸ்கட்டுக்களை கடத்திய இலங்கை பெண் கைதானார்

தங்க பிஸ்கட்டுகளை கடத்திய இலங்கைப் பெண் சென்னை விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பிலிருந்து சென்னைக்கு தங்கம் கடத்தப்படுவதாக சென்னை விமான நிலைய சுங்க அதிகாரிகளுக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

இதனையடுத்து நேற்று முன்தினம் அதிகாலை 5.30 மணிக்கு கொழும்பிலிருந்து ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானம் சென்னை வந்தது. அதில் வந்த பயணிகளை சுங்க அதிகாரிகள் தீவிர சோதனை நடத்தினர்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த முஸ்லிம் பெண்ணொருவர் சுற்றுலா பயணியாக வந்தார். அவர் மீது அதிகாரிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டது. அவரை நிறுத்தி உடைமைளை சோதனையிட்டனர். ஆனால் எதுவும் கிடைக்கவில்லை.

அவரது கூந்தல் அலங்காரம் சந்தேகத்தை ஏற்படுத்தியது. பெரியளவில் இருந்த கூந்தலை முழுமையாக பாாத்தபோது அதற்குள் 7 தங்க பிஸ்கட்டுக்கள் மறைத்து வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதன் எடை 700 கிராம். மதிப்பு இந்திய ருபா 23 இலட்சம் ஆகும்.

இதையடுத்து அவரை கைது செய்து பிஸ்கட்டுக்களை பறிமுதல் செய்தனர். (அ-2)

நமது மனதில் தூய்மை அதிகமாக இருந்தால், வலிமையும் அதிகமாக இருக்கும்.

~ காந்திஜி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## வெளிப்படையாக காரணம் கூறுங்கள்

அதிகாரக் கதிரைகளில் அமைந்திருப்பவர்கள் பொறுப்புக் கூறும் கடமைப்பாட்டையும் தமது செயல்பாட்டுக்கான காரணத்தை வெளிப்படுத்தும் பண்பையும் கொண்டிருக்க வேண்டும்.

எனினும் எங்கள் நாட்டில் ஆட்சியாளர் முதல் பொறுப்பு வாய்ந்த அரச பதவிகளில் இருப்பவர்கள் வரை பொறுப்புக் கூறுவதிலும் காரணத்தை வெளிப்படுத்துவதிலும் தயங்குகின்றனர்.

நீவிர் கேட்டு நான் கூறுவதா? என்ற கர்வத்தின் தொனிப்பை அரசு பணியில் வெளிக் காட்டும் பிரகிருதிகள் இருக்கக்கூடிய ஒரேநாடு இலங்கையாக மட்டுமே இருக்கும். இதன் காரணமாக அரசபணிக்கும் மக்களுக்குமான இடைவினைத் தொடர்பு நேரானதாக இல்லை எனலாம்.

அரசபொதுப்பணியில் ஈடுபடுகின்றவர்கள் முதலில் மக்களுடன் நல்லுறவை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

பொது மக்களுடன் நல்லுறவு ஏற்படுத்தப் படுகின்றபோதுதான் அரச பணியின் இலக்கு அடையப்படும்.

அதேசமயம் காரணம் கூறுவதிலும் அரச அதிகாரிகள் அசமந்தமாக இருத்தல் கூடாது. அசமந்தம் காட்டப்படும் நிலைமை வெளிப்படைத் தன்மைக்குக் குந்தகமானது.

வெளிப்படைத்தன்மை இல்லாது விடத்து அங்கு ஊழல், மோசடி இடம்பெறுகின்றது என ஊகிக்கப்படும்.

இத்தகைய ஊகங்கள் அரச நிர்வாகத்திற்கும் பொதுமக்களுக்குமிடையிலான சுமுகமான சூழமைவை குலைத்துவிடுவதுடன், அரச உயர் அதிகாரிகளுக்கும் அரச பணியாளர்களுக்குமிடையே ஓர் இறுக்கமான – விரும்பத்தகாத உறவு நிலையை ஏற்படுத்தும்.

இவை பொது நிர்வாகத்தை முன்னெடுப்பதில் பெரும் தடைக்கல்லாக அமையும். இப்போதெல்லாம் யாழ்.மாவட்டத்தில் பட்டதாரிப் பயிலுநராக தெரிவு செய்யப்பட்டவர்களில் சிலருக்கு நிரந்தர அரச நியமனம் வழங்கப்படுகின்றது.

அமைச்சுகளில் இருக்கக் கூடிய வெற்றிடங்கள் பட்டதாரி பயிலுநர்களிலிருந்து தெரிவு செய்யப்படுபவர்களின் மூலம் நிரப்பப்படுகின்றது.

அதேநேரம் நிரந்தர நியமனம் கிடைக்காதவர்கள் குழப்பமடைந்துள்ளனர். எங்களுக்கு நிரந்தர நியமனம் கிடைக்குமா! நான் பட்டம் நிறைவு செய்த காலத்திற்கு பின்பாக பட்டம் முடித்தவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டு விட்டது எனக்கு எப்போது என அவர்களுக்குள் எழும் கேள்விகள் நியாயமானவை.

பட்டம் நிறைவு செய்த மூப்பு நிலையின் அடிப்படையில் நிரந்தர நியமனம் கொடுப்பது தானே நியாயமானது என்று அவர்கள் தம்பக்கத்து வாதத்தை முன்வைக்கும் போது, அவர்களின் ஐயம் தெளிவு படுத்தும் பொறுப்பு சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உரியதாகும்.

அவ்வாறு அதிகாரிகள் விளக்கம் கொடுக்கத் தவறுகின்ற போது வழங்கப்பட்ட நியமனம் அதிகாரிகளில் செல்வாக்கில் நடைபெறுகிறது– அரசியல் தலையீடு உண்டு என விமர்சனங்கள் எழுத்தலைப்படும்.

எனவே நியமனம் வழங்கப்படுவதற்கு எடுத்துக் கொண்ட நடைமுறைகள் பற்றியும் ஏனைய பட்டதாரி பயிலுநருக்கு எப்போது நியமனம் வழங்கப்படும் என்பது பற்றியும் அரச உயர் அதிகாரிகள் தெளிவு படுத்த வேண்டும்.

இஃது தகவல் அறிகின்ற உரிமைக்குட்பட்டதுமாகும். ஆகவே காரணங்களைக் கூறி வெளிப்படைத் தன்மையை பேணுவது அதிகாரிகளின் தலையாய கடமை.

# வாய்த்தர்க்கம் முற்றி வாள் வீச்சில் முடிந்தது

## இருவர் காயம் ; மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

இருகுடும்பங்களினை வெட்டிக் காயப்படுத்திய மூன்று இளைஞர்களை யாழ். பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு நாவலர் வீதி ஐந்து சந்திப்பகுதியில் அயல் வீட்டாருக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரண மாக குறித்த வாள் வெட்டுச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தினைச் சேர்ந்த இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனாவைத்திய சாலையில் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த வாள்வெட்டுச்சம்பவம் தொடர்பில் யாழ்.நகரில் புடைவைக்கடை வைத்துள்ள நபர் உட்பட இரு இளைஞர்கள் யாழ்.பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் இருவர் யாழ். நீதி மன்றில் நேற்றையதினம் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ந-4)

## நல்லூர் பிரதேச சபை வாகனத்தில் மாடு கடத்தல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையின் ரைக்டர் வாகனம் கட்டாக்காலி கால்நடைகளினை கடத்திவர முற்பட்டதால் வாகனத்தின் சாரதி உட்பட மூவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு பிரதேச சபை கழிவுகளினை ரைக்டர் வாகனத்தில் ஏற்றி கிழக்கு அரியாலையில் கொட்டுவதற்காக கொண்டு சென்றுள்ளனர்.

அங்கு குப்பைகளினை இறக்கி விட்டு வரும் போது அந்தப் பகுதியில் நின்ற கட்டாக்காலி கால்நடைகள் இரண்டினை அவர்கள் பிடித்து வர முற்பட்டுள்ளனர்.

எனினும் அப்பகுதி மக்கள் சிலர் குறித்த மாட்டு கடத்தலினை முறியடித்ததோடு ரைக்டர் வானத்தினைக் கைப்பற்றி அதில் சென்றவர்களினையும் மடக்கிப்பிடித்து யாழ்.பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (ந-4)

## மின் தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்வதற்காகவும் புதிய உயர் அழுத்த மின் மார்க்கங்களின் கட்டமைப்பு மற்று இணைப்பு வேலைகளுக்காகவும் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்துமாலை 5.30மணிவரையும்சுன்னாகம், கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, மட்டுவில், தலங்காவில் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பரமேஸ் வராசந்தி, கந்தர்மடம், ஆரியகுளம், ஸ்ரான்லி வீதி, வேம்படி, குருநகர், பாசையூரின் ஒரு பகுதி, பிறவுண் வீதி, கஸ்தூரி யார் வீதி, கன்னாதிட்டி, மாவடி, தட்டா தெரு தொடக்கம் முட்டாஸ் கடைச்சந்தி வரையான பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையிலும் சுன்னாகம், கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, மட்டுவில், உரும்பிராய், கோண்டாவில், மருத்துவப்பீட பிரதேசம், திருநெல்வேலி பிரதேசம், பட்டணப்பகுதி, யாழ்.மாநகரசபைப்பகுதி, ஸ்ரான்லிவீதி, நாச்சிமார் கோவிலடி முதல் முட்டாஸ் கடை சந்திவரையான பிரதேசம் ஆகிய இடங்களிலும், மேலும் வடமராட்சி பிரதேசத்திற்கான மின் விநியோகமும் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் பிரதேசங்களில் உள்ள மின் மார்க்கங்களுக்கு இடையூறாகவுள்ள மரக்கொப்புக்கள் தென்னோலைகள் என்பவற்றை வெட்டியகற்றி உதவுமாறும் பொதுமக்களை சுன்னாகம் இலங்கை மின்சார சபை கேட்டுள்ளது.

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



நீங்கள் மற்றவர்களை எடைபோட்டது போன்றே உங்களை நீங்கள் எடைபோட்டுக் கொண்டீர்கள். உங்களை நீங்களே மன்னித்துக்கொள்ள இயலாததால் பாவமன்னிப்புக் கோருகிறீர்கள். உங்களால் மன்னிக்க இயலாததால் பழிவாங்க முற்பட்டீர்கள். ஆகவே நீங்கள் இறப்பு– பிறப்பு என்ற சூழலிலே சிக்கிக் கொண்டுவிட்டீர்கள். என் பங்கிற்கு நான் எனது வார்த்தையைக் காப்பாற்றிக்கொண்டுதான் வந்திருக்கிறேன். இம்முறையாவது நீங்கள் மற்றவர் உங்களுக்காக என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களோ அதுபோன்றே நீங்களும் அவர்களுக்குச் செய்யவேண்டும். மறுபடியும் நீங்கள் மற்றவர் உங்களுக்கு என்ன செய்துவிடக்கூடாது என்று எதிர்பார்க்கிறீர்களோ அதுபோன்றே நீங்களும் அவர்களுக்கு அதைச் செய்து விடக்கூடாது. நீங்கள் என்னைக் கண்டுபிடித்துவிட்டீர்கள் என்னால் எப்படி வாழ்வது என்பதைத் தெளிவாக அறிவீர்கள். ஆனால் இது எதுவும் உங்களுக்குத் தெளிவாகவில்லை என்றால் நீங்கள்விரும்புகின்ற என்னுடைய புனித நூல்களில் எதிலாவது என்னுடைய அருள்மொழிகளில் எதையாவது பின்பற்றுங்கள். ஏனெனில் எல்லாப் புனித நூல்களிலும் உள்ள எல்லா அருள்மொழிகளும் எனது, என்னுடையதே ஆகும்.

## சமயதீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் சமயதீட்சை வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 9ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9மணிக்கு இல.66, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள சைவபரிபாலன சபை மண்டபத்தில் நடைபெறுமென இச்சபை உப தலைவர் அறிவித்துள்ளார்.

எனவே ஆர்வலர்கள் சைவசமய ஆசாரமுறைப்படி வந்து தீட்சை பெறுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-2)

## சிறுவர் தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு மாவட்ட சிறுவர் அபிவிருத்தி அலுவலகத்தினால் நடத்தப்படும் சிறுவர் தினமும் பரிசளிப்புவிழாவும் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணி வரை நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், சிறப்புவிருந்தினராக வடமாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு சேவைகள் ஆணையாளர் தி.விஸ்வரூபன், நல்லூர் பிரதேச செயலாளர் பி.செந்தில்நந்தனன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### தெய்வ நிலைக்கு உயருங்கள்



மற்றவர்களுக்கு நன்மை ஏற்படுமானால் நரகத்திற்குக்கூட செல்வதற்குத் தயாராய் இருங்கள். மரணம் வருவது உறுதியாக இருக்கும்போது ஒரு நல்ல காரியத்திற்காக உயிரை விடுவது மேல்.

உலகில் நல்லவர்கள் பெரிய தியாகங்களைச் செய்கிறார்கள். அதன் விளைவாக வரும் நன்மைகளை மனிதகுலம் முழுவதும் அனுபவிக்கிறது.

உலக வாழ்வில் இருந்து தப்பியோட முயற்சி செய்யவேண்டாம். வெற்றியோ தோல்வியோ போராடுங்கள்.

பாமரன் பண்புள்ளவனாகவும் பண்புள்ளவன் தெய்வமாகவும் உயர வேண்டும். இதுவே ஆன்மீகத்தின் பயன்.

தெய்வீகத்தன்மை இல்லாமல் பெறும் மிதமிஞ்சிய அறிவும் ஆற்றலும் மனிதர்களை மிருகங்களாக்கி கீழ்நிலைக்குத் தள்ளிவிடும்.

சுயநலம், சுயநலமின்மை இந்த இரண்டையும் தவிர கடவுளுக்கும் சாத்தானுக்கும் வேறு எந்தவிதமான வேறுபாடும் கிடையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான உதைபந்தாட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இப்போட்டியில் 20 வயதுப் பிரிவில் சென். ஜோன்ஸ் கல்லூரி 3:0 என்ற ரீதியில் வெற்றி பெற்றது. வெற்றி பெற்ற அணி வீரர்களை படத்தில் காணலாம்.

# கால்டன் கிண்ண கூடைபந்தாட்டம்; காலிறுதிக்கு யாழ்.அணி தெரிவு



கால்டன் விளையாட்டுக் கழகம் நடத்தும் அகில இலங்கை ரீதியிலான கால்டன் வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் அண்மையில் கொழும்பு அமல் சர்வதேச மைதானத்தில் நடைபெற்றது.

நடைபெற்ற ஆட்டத்தில் யாழ்.மாவட்ட அணி வெற்றியீட்டி கால் இறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ். மாவட்ட அணியை எதிர்த்து மரூன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் யாழ்.மாவட்ட அணி 77.58 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்.மாவட்ட அணியை எதிர்த்து வோஷியன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் யாழ்.மாவட்ட அணி 75:58 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

# யாழ்.மாவட்ட கரம் போட்டியில் வெற்றி பெற்றோர்

யாழ்.மாவட்ட கரம் சங்கம் முதல் முறையாக ஆண், பெண்களுக்கான திறந்த கரம் சுற்றுப் போட்டியினை நடத்தியது.

இச்சுற்றுப் போட்டிகள் கடந்த திங்கட்கிழமை யாழ்.மாவட்ட கரம் சங்கத் தலைவர் வி.பாலமுரளி தலைமையில் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மத்திய கல்லூரி அதிபர் கே.எழில்வேந்தன் கலந்து கொண்டார்.

இதில் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில் எம்.அன்ரனி, எம்.செந்தூரன், எம்.சோபாநந் முதல் மூன்று இடங்களையும் ஆண்களுக்கான இரட்டையர் பிரிவில் எஸ்.சற்குணமூர்த்தி- ஜெ.ஜெயகாந்தன், எஸ்.காண்டீபன்-எஸ்.பிரியதர்சன், எம்.சோபாநந்-எம்.குகதீபன் ஆகியோர் முதல் மூன்று இடங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இதேபோல் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் கே.தேசாயினி,எஸ்.லோஜனா, எஸ்.வித்தியாராணி முதல் மூன்று இடங்களையும் இரட்டையர்களுக்கான பிரிவில் கே.டி.லோஜின்னி-எஸ்.வித்தியாராணி, எஸ்.லோஜனா-கே.தேசாமினி, எஸ்.தாரணி-வி.சௌதினி ஆகியோர் முதல் மூன்று இடங்களைப் பெற்றனர்.

# சென்.ஜோன்ஸ்-யாழ்.மத்தி காற்பந்தாட்டம்







யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையிலான காற்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகலில் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

14 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. 16 வயதுப் பிரிவினருக்கான போட்டி 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

18 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் பலத்த போட்டி நிலவியது. இருந்தும் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு கோல்களை அடித்ததினால் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

20 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியின் கைகள் ஓங்கி இருந்தன. முதல் பாதி ஆட்டத்தில் இரண்டு கோல்களினை சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி அடித்தது. இரண்டாவது பாதியில் மேலும் ஒரு கோலினைப் போட்டு 3:0 என்று சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூசிலாந்திற்கெதிரான கொழும்புப் போட்டிகள் கண்டிக்கு மாற்றம்

Sri Lanka Cricket

இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும் இலங்கை அணிக்குமிடையிலான 2-வது, 3-வது ஒருநாள் சர்வதேச போட்டிகள் கண்டி பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெறும் என இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் நவம்பர் 4-ம், 6-ம் திகதிகளில் இடம்பெறவிருந்த இப்போட்டிகள் இலங்கையில் தொடர்ந்து காணப்படும் மோசமான வானிலையின் பாதிப்பால் கண்டிக்கு மாற்றப்பட்டுள்ளது.

அண்மைய நாட்களில் தொடர்ந்து பெய்த கடும் மழை காரணமாக கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானம் நீரில் மூழ்கியுள்ளதுடன், கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தைச் சூழக் காணப்படும் ஏரியில் நீர் நிறைந்துள்ளதாகவும், மைதானத்திலுள்ள நீர் வழிந்தோடவில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டியின் மைதானம் மாற்றம் தொடர்பாக நியூசிலாந்து கிரிக்கெட் சபைக்கும், போட்டியின் பிரதான ஒளிபரப்பாளரான ரென் ஸ்போர்ட்ஸ் நிறுவனத்திற்கும் விளக்கமளித்துக் கடிதங்களை அனுப்பியுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி அஜித் ஜெயசேகர தெரிவித்தார்.

2-வது, 3-வது போட்டிகளின் மைதானம் மாற்றப்பப்பட்டுள்ள போதிலும் அவை ஏற்கெனவே திட்டமிட்டபடி 4-ம், 6-ம் திகதிகளிலேயே இடம்பெறவுள்ளதுடன், கொழும்புப் போட்டிக்கான நுழைவுச்சீட்டுக்களை கண்டியிலும் பயன்படுத்த முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கண்டி பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஏற்கெனவே இலங்கை, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இருபது-20 போட்டியும், இத்தொடரில் முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியும் இடம்பெற விருந்தும் மழை காரணமாக அவை கைவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

NEW ZEALAND CRICKET

## வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முதன்மை வேட்பாளராக நானே போட்டியிடுவேன்-டக்ளஸ்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முதன்மை வேட்பாளராக அரசாங்கம் என்னைத்தான் நிறுத்தும். எனது விருப்பத்திற்கு மாறாக அரசாங்கம் எத னையும் செய்யாது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் அரசாங்கத்தின் சார்பாக முதலமைச்சர் வேட்பாளராக டக்ளஸ் தேவானந்தாவை நிறுத்துவதா? அல்லது விடுதலைப்புலிகளின் சர்வதேச விவகாரங்கள் மற்றும் ஆயுத கொள்வனவுக்கு பொறுப்பாளராக இருந்தவரும் தற்போது அரசாங்கத்தின் சாட்சியாக மாறியுள்ளவருமான கே.பி. என அழைக்கப்படும் குமரன் பத்மநாதனை நிறுத்துவதா என அரசாங்கம் திட்டமிட்டு வருவதாக வெளியான தகவல் தொடர்பில் ஊடகவியலாளர்களினால் கேள்வி எழுப்பப்பட்ட போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அத்தோடு வடக்கின் முதலமைச்சர் நான் தான் எனவும் எனது விருப்பத்திற்கு மாறாக அரசாங்கம் எதையும் செய்யாது எனவும் அரசியலுக்கு கே.பியும் வரலாம் கி.பியும் வரலாம் ஆனால் அரசாங்கத்தின் கொள்கையில் மாற்றம் ஏற்படாது எனவும் அவர் உறுதிபடத் தெரிவித்தார். (ந-6)

## தற்கொலை அங்கி...

நிறையுடைய தற்கொலை அங்கிஒன்றும், 3 கிலோ கிராம் நிறையில் ஒன்றும், 4 கிலோ கிராம் நிறையில் மூன்றும், 8 கிலோ கிராம் நிறையில் ஒன்றுமாக மொத்தம் 6 தற்கொலை அங்கிகள் மீட்கப்பட்டுள்ளன.

இவற்றோடு புலிகளினால் பயன்படுத்தப்பட்ட அதிநவீன செய்மதித் தொலைத் தொடர்பு சாதனம் ஒன்றும் ஆர்.பி.ஜி மற்றும் ரி.56 ரக துப்பாக்கியொன்றும் மீட்கப்பட்டுள்ளன.

மேலும் இறுதிக்கட்ட போர் நடைபெற்ற இடமான இப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் தொடர்ச்சியாக மீட்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-4)

## மீள்குடியேற்ற அமை...

ஆரம்பிப்பதற்காக அடிக்கல்லையும் அமைச்சர் அங்கு நாட்டியுள்ளார்.

இவ் 50 வீடுகளும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 31-ம் திகதிக்கு முன்னதாக உரியவர்களிடம் கையளிக்கப்படவுள்ளதாக அமைச்சர் இதன் போது குறிப்பிட்டார்.

மேலும் ஏனைய 115 குடும்பங்களுக்கான அடுத்த கட்ட வீடமைப்புத் திட்டமும் வரும் வருடம் மார்ச் 31-ம் திகதிக்கு முன்னதாக நிறைவேற்றப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் முல்லைத்தீவு அரச அதிபர் ந.வேதநாயகன், ஜனாதிபதியின் முல்லைத்தீவு இணைப்பாளர் சதாசிவம் கனகரத்தினம், முல்லைத்தீவு இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.பி.ஆர்.மார்க், முல்லைத்தீவு வலயக்கல்விப்பணிப்பாளர் மா.இராஜகுமார், உதவி அரச அதிபர் பொன்னுத்துரை குகநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ந-267)

## இலங்கை-...

யிலும் இந்தியாவிலும் முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டங்கள் குறித்தும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

இருநாடுகளினதும் மீனவர்கள் தொடர்பான பிரச்சினைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (ந-11)

## இலங்கை...

புதிய வாக்குறுதிகளை ஏற்றுக் கொள்ள முடியாது.

மனித உரிமை பாதுகாப்புத் தொடர்பில் இலங்கை சில தசாப்தங்களாகவே வெற்று வாக்குறுதிகளை வழங்கி வருகின்றது என சர்வதேச மன்னிப்புச் சபையின் இலங்கை நிபுணர் யொலண்டா பொஸ்டர் தெரிவித்துள்ளார்.

போர் முடிபடைந்து மூன்றாண்டுகள் கடந்துள்ள நிலையில் அரசாங்கம் தொடர்ந்தும் மாற்றுக் கருத்துக்களை வெளியிடுவோரை ஒடுக்கி வருகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-11)

## தமிழர்களு...

கண்டவாறு தெரிவித்தார்.

மஹாநாயக்க திப்பட்டுவாவே ஸ்ரீசுமங்கள தேரர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை எமது நாட்டுக்கு உகந்தது அல்ல. நாட்டுக்கு தீங்கை ஏற்படுத்தும் ஒருவரது கையிற்கு அது செல்வதை தடுக்க வேண்டும்.

இந்த நாட்டின் தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும். அதற்காக மாகாண சபை முறைமையும் தற்போதைய தேர்தல் முறையும் உகந்தது அல்ல என்றும் அவர் தெரிவித்தார். (ந-11)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி முத்தையா நாகம்மா



மூளாய் வீதி, வட்டுக்கோட்டையை சேர்ந்த முத்தையா நாகம்மா 02.11.2012 நேற்று வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்வமலர், திருச்செல்வம் ஆகியோரின் அன்புத் தாயாரும், ராஜேஸ்வரியின் அன்பு மாமியாரும், மோகன்தாஸ்- ரேணுகா (லண்டன்), செல்வரூபன்- செல்வமலர்(சுவிஸ்), ஜெகதீஸ்வரன் ஜெயமலர்(ஜேர்மனி), ரஞ்சித் சுகிர்தமலர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 3.11.2012 இன்று சனிக்கிழமை நண்பகல் 12.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

தகவல் : மு.திருச்செல்வம் (மகன்)

(C-1431)

### சீனிவாசகம் பொன்னுத்துரை



மயிலங்கூடல் கருகம்பானையைப் பிறப்பிடமாகவும், பாகுதேவன்புலம், தாவடி வடக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் தற்காலிகமாக லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற இராணுவ உத்தியோகத்தர் சீனிவாசகம் பொன்னுத்துரை நேற்று வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப் படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பாகுதேவன்புலம்,
தாவடி வடக்கு,
கொக்குவில்.
T.P: 0214925996
0774586413

தகவல்: மகன்
குடும்பத்தினர்

(887)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றப் பிரேரணை... டெசோ தீர்மானங்...

படுத்த ஒரு தேசிய வேலைத்திட்டத்தை அமைத்தல் என்பவை தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகளை நாம் கவனத்தில் கொண்டுள்ளோம்.

ஜனாதிபதியின் அதிகாரங்களை வலுப்படுத்தும் 18-வது திருத்தம் பற்றியும் அரசியல் தீர்வு தொடர்பில் உடன்பாடு எட்டப்படாமை தொடர்பிலும் நாம் கவலையடைகின்றோம். விடுவிக்கப்பட்ட பகுதிகள் இராணுவமயப்படுத்தப்பட்டுள்ளன.

இராணுவம் மக்களின் அன்றாட விடயங்களில் தலையிடுகின்றது. அரசசார்பற்ற நிறுவனங்களின் செயலகத்தை 2012 லிருந்து பாதுகாப்பு அமைச்சு கட்டுப்படுத்துகின்றது.

காணாமல்போதல், சித்திரவதை, சட்டத்தின் மேலான கொலைகள், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், பயமுறுத்தலுக்கு உள்ளாதல் போன்ற மனித உரிமை மீறல்கள் தொடர்கின்றன.

ஊடகவியலாளர்களை தாக்கியவர்களைத் தண்டிக்கும் முயற்சிகள் காணப்படவில்லை. நீதித்துறையில் நிர்வாகம் தலையிடுவதைத் கண்டித்த நீதிபதி தாக்கப்பட்டுள்ளார். மாகாண சபைகளை பலவீனப்படுத்தும் ஒரு சட்டமூலத்தை எதிர்த்த அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் தலைவர் தாக்கப்பட்டுள்ளார். இந்த வகையில் பலவித உரிமை மீறல்கள் தண்டனையின்றி தொடர்கின்றன.

இவற்றைக் கருத்தில்கொண்டு அமெரிக்கா பின்வரும் பரிந்துரைகளை செய்கின்றது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளைசெயற்படுத்தல், அரசசார்பற்ற நிறுவனங்களின் மேற்பார்வையை சிவில் நிர்வாகம் ஒன்றிடம் வழங்குதல், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை பாதுகாத்தல்,

மனித உரிமை மீறல்கள் தண்டிக்கப்படாது விடப்படுவதை நிறுத்துதல், பிரதம நீதியரசரை குற்றப்பிரேரணை ஒன்றின்மூலம் பதவி விலக்க எடுக்கும் முயற்சியின் பின்னணியில் நீதித்துறையின் சுதந்திரத்தை வலுவூட்டும் வகையில் அரசதலையீடுகள் நிறுத்தப்பட வேண்டும் என்றார். (ந-11)

மனுவினையும், சென்னையில் நடைபெற்ற டெசோ மாநாட்டின் தீர்மானங்களையும், ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவில் வழங்கப்படவுள்ள மனுவினையும், கருணாநிதி சார்பில் பொருளாளர் மு.க.ஸ்ராலின், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவர் டி.ஆர்.பாலு ஆகியோர் அமெரிக்க நேரப்படி நேற்று முன்தினம் பகல் 11.15 மணியளவில் ஐ.நா மன்றத்தின் துணைப் பொதுச் செயலாளர் யான் லியாசனிடம் வழங்கினர்.

அப்போது ஐ.நா.மன்றத்தின் துணை பொதுச் செயலாளர் யான் லியாசன் மு.க.ஸ்ராலினிடம், அமெரிக்காவில் சமீபத்தில் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய இயற்கை சீற்றத்துக்கு இடையில் மிகவும் சிரமப்பட்டு என்னைச் சந்திக்க வந்திருக்கின்ற இந்நிகழ்ச்சி ஒன்றிலிருந்தே இலங்கைத் தமிழர் பிரச்சினையில் உங்கள் தலைவரும், நீங்களும் எந்த அளவிற்கு மனித நேயத்தில் அக்கறை உள்ளவர்களாக இருக்கிறீர்கள் என்பதை நான் உணர்கிறேன்

எனவே இலங்கைத் தமிழர் பிரச்சினையில் உங்கள் தலைவரும், நீங்களும் ஐ.நா. மன்றமும் என்ன செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்கள் என்று கேட்டார்?

'அதற்கு ஸ்ராலின், இலங்கையில் நடைபெற்ற போரினால் புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்களுக்கு வாழ்வாதாரம் கிடைக்க வேண்டும். நிம்மதியான வாழ்க்கை அமைய வேண்டும், அவர்கள் சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட வேண்டும், கௌரவமான வாழ்க்கை அமைய வேண்டுமென்ற டெசோ மாநாட்டின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இலங்கையில் நடைபெற்ற போரினால் 90 ஆயிரம் பெண்கள் விதவைகள் ஆக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் மேலும் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை இலங்கை இராணுவம் தவறான முறையில் நடத்துகிறது. இதற்குத் தீர்வுகாண வேண்டும் என்றார்.

அதைக்கேட்ட யான் லியாசன், நீங்கள் அளித்துள்ள இந்தத் தகவல் மிக மிக முக்கியமானது. இந்தப் பிரச்சினைக்கு ஐ.நா.மன்றம் எப்படித் தீர்வு காண வேண்டும் என்பது குறித்து எங்கள் (ஐ.நா.மன்றம்) பொதுச்செயலாளரின் கவனத்திற்கு சென்று தீர்வு காண்போம் என்றார்.

இதைத்தொடர்ந்து மு.க.ஸ்ராலின், இலங்கைப் போரினால் ஒரு லட்சத்து 25 ஆயிரம் தமிழர்கள் பல்வேறு நாடுகளில் புலம்பெயர்ந்து நிம்மதியற்ற வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் விரும்பியபடி இலங்கையில் குடியுரிமை பெற்றுத்தரப்பட வேண்டும். அநாதைகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்.

தமிழர் பகுதிகளில் உள்ள இராணுவத்தை திரும்பப் பெற வேண்டும். தமிழர்கள் அவர்கள் விரும்பிய அரசியல் தீர்வுக்கு ஏற்பட அவர்கள் விருப்பப்படி பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றார்.

அப்போது ஐ.நா.துணைப் பொதுச் செயலாளர் யான் லியாசன், இந்தியாவில் உள்ள அரசியல் கட்சிகள் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் எந்த நிலையில் இருக்கிறார்கள்?

அதற்கு மு.க.ஸ்ராலின், இந்தியாவில் உள்ள எல்லாக் கட்சிகளும் இலங்கைப் பிரச்சினையில் அங்குள்ள தமிழர்களின் மனித உரிமை காக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்கள். இந்த பிரச்சினையில் ஐ.நா.மன்றம்தான் சரியான தீர்வை ஏற்படுத்த முடியும் என்று நம்புகிறார்கள் என்று தெரிவித்தார்.

மனித உரிமை மீறல் இலங்கையில் நடைபெற்ற பிரச்சினை என்று கருதாமல் உலக நாடுகள் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்று எடுத்துக்கொண்டு ஐ.நா.மன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

மேலும் மு.க.ஸ்ராலின், பிரித்தா[illegible] தமிழர் பேரவை சார்பில் லண்டனில் நடைபெறும் உலக தமிழர் மாநாட்டில் பங்கேற்க உள்ளதாக தெரிவித்தார். அதற்கு ஐ.நா.துணைப் பொதுச்செயலாளர் யான் லியாசன் வாழ்த்துக் கூறினார்.

இந்தச் சந்திப்பின்போது ஐ.நா.மன்றத்தின் பொதுச்செயலாளர் பான் கீ மூன், ஆலோசகர் விஜய் நம்பியாருடன் இருந்தார். இந்தச் சந்திப்பு பகல் 11.15 மணி முதல் 11.43 மணி வரை சுமார் 28 நிமிடம் நடைபெற்றது என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ந-11)


## ACCA To your Future Finance & Accounting

ACCA கற்கைநெறியின் மூன்றாவது வருட நிறைவை முன்னிட்டு ACCA இலங்கை, கற்கை வழிகாட்டல் அலகு, யாழ்ப்பாணம் தொழில்நுட்ப நிறுவனத்தின் அனுசரணையுடன்

புதிய பிரிவுகள்

பிரிவு I : 10.11.2012-சனிக்கிழமை-காலை 9.00 மணி

பிரிவு II : 24.11.2012-சனிக்கிழமை-காலை 9.00 மணி

நேர அட்டவணை

| பாடங்கள் | பாடநேரம் |
|---|---|
| F1 | 9.30a.m-11.30a.m |
| F3 | 12.30p.m-2.00p.m |
| F2 | 2.30p.m-4.30p.m |

ACCA-June மாத பரீட்சைக்குரிய பிரிவு V இல் இணைந்து பதிவுக் கட்டணத்தில் 25% சலுகையினை உடன் பெற்றுக் கொள்ளுங்கள்.

பல்கலைக்கழக, உயர்தொழில்நுட்ப நிறுவன பட்டதாரிகள் பாட விலக்களிப்பினை பெற்றுக் கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்

TP:0215670345

email:jtiedu@gmail.com இயக்குநர்,

யாழ்ப்பாணம் தொழில்நுட்ப நிறுவனம்

இல.7, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

(886)


# மரண அறிவித்தல்

சிவநெறிப் புரவலர் **தம்பியப்பா சண்முகலிங்கம்** (J.P)

(உரிமையாளர் : நோதேண் இன்டர்ஸ்ரீஸ் (பி) லிமிடெட்-யாழ்ப்பாணம்.

தலைவர் : சைவபரிபாலனசபை - யாழ்ப்பாணம்)



சுருவிலைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் நீராவியடி, பிறவுண் வீதியை வதிவிடமாகவும் கொண்ட தம்பியப்பா சண்முகலிங்கம் 28.10.2012 ஞாயிற்றுக் கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் இராசலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தம்பியப்பா-கண்ணம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம்-வள்ளியம்மை தம்பதியரின் மருமகனும், சுபோதினி, சுபேந்திரன், Dr.வினோதினி, நந்தினி ஆகியோரின் அன்புத்தந்தையும், Dr.உதயகுமரன், பாலாம்பிகை ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சத்யனின் அருமைப்பேரனும், மாணிக்கவாசகன், காலஞ்சென்ற சபாநாதன் மற்றும் சிவநாதன், உலகநாதன், நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற Dr.இராசலிங்கம் மற்றும் சிவலிங்கம், மகாலெட்சுமி, ஆனந்தலெட்சுமி, சந்திரமதி, ஸ்ரீஸ்கந்தராஜா, அருள்கந்தராஜன், நவநீதராஜன் ஆகியோரின் பாசமிகு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.11.2012) ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 10 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'குற்றாலம்'

43, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

021 222 8038

தகவல் :

குடும்பத்தினர்

(871)

# 13ஆம் திருத்தத்தை...

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்தம் முடிபுற்ற பின்பு சிங்கள மக்கள் தமிழ் பேசும் மக்களுடன் ஐக்கியமாக வாழ்ந்து அவர்களுக்கு அதிகார பரவலாக்கலை வழங்கத் தங்களை தயார் படுத்திக் கொண்டிருக்கும் நிலையில் 13-வது திருத்தச்சட்டத்தை அகற்றக் கோரி ஹெல உறுமய, விமல் வீரவன்ச போன்றவர்கள் மீண்டும் இனவாதத்தை சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்தி வருகின்ற னர்.

அதேநேரம் ஊடகங்கள் மூலமாக 13-வது திருத்தச்சட்டமான மாகாண சபை முறைமையை ஆதரிப்பவர்கள் அரசாங்கத்தை விட்டு விலக வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரசாங்கத்திற்கு ஆதரவளித்துக் கொண்டிருக்கும் பிற கட்சிகளான எங்களை அரசாங்கத்தை விட்டு வெளியேற செல்வதற்கு இவர்களுக்கு எவ்வித அருகதையும் இல்லை. விமல் வீரவன்ச ஜே.வி.பியில் இருந்த பொழுது இக்கட்சி இனவாதம் பேசியது.

அதேபோல் ஹெல உறுமய கடந்த முன்னைய பாராளுமன்றத் தேர்தலில் இனவாதம் பேசி தனித்து போட்டியிட்டு அதிக ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது.

இருப்பினும் இந்த இனவாத போக்கினால் கடந்த தேர்தலில் இவர்கள் ஒரு சில ஆசனங்களையே பெற்றுக் கொண்டனர். இனவாதம் பேசுபவர்களுக்கு இப்படியான முடிபே வரலாறாகும்.

அதேநேரம் அரசாங்கம் ஒருபோதும் 13-வது திருத்தச்சட்டத்தை அகற்றுவதாகத் தெரிவிக்கவில்லை. [illegible] சுதந்திரக் கட்சிக்கும் ஒருபோதும் மாகாணசபை முறைமையை இல்லா தொழிப்பதற்கு விருப்பமில்லை என்பது எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும்.

அதேநேரம் மேலும் அதிகாரப் பரவ[illegible]கலை இந்நாட்டிலுள்ள தமிழ் மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் வேளையில் 13-வது திருத்தச்சட்டத்தை அகற்றினால் அரசாங்கத்துடனும் இருக்க வேண்டிய அவசியமும் எனக்குத் தேவையில்லை எனவும் பிரபா எம்.பி. குறிப்பிட்டுள்ளார். (ந-11)


## வேலையாட்கள் தேவை

Selva Tele Communication
124,Temple Road,
Jaffna.

மேற்படி நிறுவனத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை. யாழ்.மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:-0777286050

(882)

## 4 நாட்களில் கணனித்துறையில் வல்லுனர் ஆகலாம்

Computer Hardware Engineering

அனைத்து சகல விதமான கணனிகளையும் திருத்துதல்.

கணனி ஒன்று சேர்த்தல். (Assemble)

கணனி மென்பொருள்.

கணனியில் வரும் அனைத்து பெயர்களையும் கண்டறிதல்.

மல்ரி மீடியா தொடர்பான பூரண அறிவு.

சுயமாக கணனியைப் பொருத்துதல்.

பாடநெறி முடிவில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்.

**IISEEES NALLUR CAMPUS**

762, பருத்தித்துறை வீதி நல்லூர்.

T.P. : 021 222 4728, 0777444225

e mail : Info@iiseees.lk

(சி-1430)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.